சிவானந்த சாதன நிலைய வெளியீடு மலர்-9.

ஓம்

ரிஷீகேசம்,

ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி யோகீந்திரரவர்கள்

சிறப்புப் பாயிரத்துடன் கூடிய

பிரணவ தீபம்

(அத்வயானந்தம்)

விலை அணா 6

தென்னிந்தியத் தலைமைத் தெய்வ நெறிக் கழகம்
சிவானந்த சாதன நிலையம்,
ஈங்கோய்மலை அஞ்சல்.
முசிரி நாடு. (திருச்சிராப்பள்ளி மாநாடு)
ஜனவரி 1949.

ப்பாளர்:- திரு. P.A.C. ராமசாமி ராஜா, ராஜபாளையம்.

சிவானந்த யோக குரு.

எவ்வுயிர்க் குந்தீமை இழையாமை யாதியாம்
இவைசெயா இயமமுடனே

இருதய மொடுபுறந் தூய்மைசெயல் முதலாகும்
இவைசெயும் நியமமதுவும்

செவ்வைசேர் பதுமநல் சித்தர்க ளாசனத்
திறத்துபல் இருக்கைநிலையும்

சீர்பட உயிர்ப்பினை அடக்கியுயிர் வசமாகச்
செய்பிராண யாமமுறையும்

கௌவுமைம் பொறிகளை யாமைபோற் பிரத்தியா
காரமா யடக்குவகையும்

கருதுமொரு பொருளையே பற்றுமா மனத்தினைக்
கட்டுதா ரணைதன்னையும்

திவ்விய உருவினின் நீங்காத தியானமும்
திரிபறு சமாதியிருமை

திடமாக யானடையச் செப்புமொரு தெய்வமே
சிவானந்த யோககுருவே.

இந்நூலாசிரியரின் குருவும்
சிறப்புப்பாயிர ஆசிரியருமாகிய



ரிஷீகேசம்,
ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதி யோகீந்திரர்.

OM

FOREWORD

Within the twinkling of an eye, you can enter the Realm of Inexpressible Bliss–Niratisaya Anandam. The key is in your own hands: that is OM, the most sacred Pranava. Swami Adwayanandaji Maharaj has succinctly explained in his own inimitable style the lofty philosophical imports of this sacred Pranava.

OM is the Name of the Nameless: the Form of Pranava is the Form of the Formless. OM is the symbol of Nada Brahman. OM leads the Sadhaka instantly into Samadhi.

In the Upanishads you find this Sacred Pranava compared to a bow with the help of which the Atman (the arrow) is directed to the Lakshya (target), i. e., Brahman. When the Yogi who has full control over his senses and who has practised the initial rules of self - discipline,

viz., Yama, Niyama, Asana, Pranayama, Pratyahara, and Dharana, directs this arrow of Atman with the help of the Pranava-Dhanuh, the arrow at once becomes one with the target! He loses himself in Nirvikalpa Samadhi and finds his Goal - Kaivalya Moksha.

All Tapas, all Sadhanas, all observances, the practice of devotion, the performance of austerities, the vow of celibacy, of truth and of Ahimsa — all these have this one end and aim: Self-Realisation. From time immemorial the Sages of India have resorted to this Great Weapon - Pranava - for the purpose of achieving this aim.

Pranava leads the aspirant through all the stages, and — that is the extraordinary charm in its meditation - all at once! Ordinarily, man's Antahkarana is filled with Vishayakara Vrittis. He runs after objective enjoyment. He is dissatisfied: he is puzzled: he is unable to

quench his thirst for enjoyment. He is unaware that the very source of Bliss is within him - his own Self. Pranava guides him along the right path. OM! It reveals to him the source of Joy, Bliss, Peace and Immortality. Through the three Avasthas represented by A U and M, he is led beyond to Turiya: and there in that Silence, he finds his own Self - the Amatra Atman! That is the Goal!

As Swami Adwayanandaji has rightly pointed out in this wonderfull booklet, the glories of Pranava are indescribable. Various Upanishadic Seers have sung the glory of the Pranava: I have brought them together in my book "Philosophy and Meditation on OM". Swami Adwayanandaji has explained in easy style the numerous meanings of Pranava: and even more useful are his practical instructions on the meditation on OM. I am quite sure that a perusal of this invaluable guide to Pranava-

Upasana will illumine the heart of the Sadhaka and will enable him to attain the Supreme.

May God bless Sri Swami Adwayanandaji Maharaj! May God enable you all to realise the Self in this very birth!!

Ananda Kutir.
8th December, 1948. } **Swami Sivananda**

ஓம்.

பிரணவ தீப ஆசிரியரின் குருவும், அகில உலகத் தெய்வநெறிக் கழகங்களின் தலைவரும் ஆகிய பூமண்டல சத்குரு, ரிஷீகேசம்,

ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி யோகீந்திரர்

அவர்கள் எழுதிய சிறப்புப்பாயிரம்.

இமைப்பளவில் நிரதிசயானந்த மென்னும் சொல்ல முடியாத பேரின்ப சாம்ராஜ்ஜியத்தை அடையக்கூடும். திறவுகோல் உங்களிடத்திலேயே இருக்கின்றது. அதுவே ஓம் என்னும் உன்னதப் பிரணவமாகும். இந்தப் புனிதமான பிரணவத்தின் மிகவுயர்ந்த தத்துவக் ஞானக் கருத்துக்களை அத்வயானந்தர் என்னும் துறவிராஜர், தனது சொந்தமான ஒப்பற்ற நடையில் சங்கிரகமாக விவரித்திருக்கின்றார்.

ஓம் — நாமமற்றதன் நாமம். வடிவ மற்ற தன் வடிவம். நாதப் பிரம்மத்தின் சின்னம். சாதகனை க்ஷணத்தில் சமாதி நிஷ்டைக்குக் கொண்டுபோய் விடுவதும் - ஓம். பிரணவமானது ஆத்மாவாகிய பாணத்தை பிரம்மமாகிய லக்ஷியத்தில் செலுத்தும் வில்லிற்கு ஒப்பிடப்பட்டுள்ளதை உபநிஷத்துக்களில் காணலாம். இந்திரியங்களை முற்றிலும் வசப்படுத்திய வரும், ஆத்மீயப் பழக்கத்தின் ஆரம்ப விதிகளாகிய இயம, நியம, ஆசன, பிராணாயாம, பிரத்தியாகார, தாரணைகளைப் பயின்றவருமான யோகியானவர் பிரணவமாகிய வில்லின் உதவியால் ஆத்மாவாகிய பாணத்தைச் செலுத்தும்போது பாணமானது லக்ஷியத்தோடு கலந்து ஒன்றுகிறது. அவர் நிர்விகல்ப சமாதியில் தன்னை மறந்து லக்ஷியத்தை அடைகின்றார். அதுவே கைவல்ய மோக்ஷம்.

தபஸ் என்ன, சாதனங்கள் என்ன, அனுஷ்டானங்கள் என்ன, பக்தி யென்ன, விரக்தி யென்ன, பிரம்மச்சர்ய மென்ன, ஏனைய சத்தியம், அஹிம்சை யென்ன இவைகள் யாவும் ஒரே இலக்கையும், முடிவையுமே கொண்டவை. அதுவே ஆத்மானுபவம். அநாதி காலமாகவே நம் நாட்டு ரிஷிகள் இந்த லக்ஷியத்தை அடைவதற்காகப் பிரணவம் என்ற ஒரு மகத்தான ஆயுதத்தைக் கையாண்டுள்ளார்கள்.

பிரணவத் தியானத்தில் ஒரு தனி மகத்துவம் உள்ளது. அதாவது, சாதகனை எல்லா விதமான நிலைகளின் வழியாகவும் ஒரே சமயத்தில் இழுத்துச் செல்கின்றது. மனிதனின் அந்தக்கரணம் விஷயாகார விருத்திகளால் நிறைந்திருக்கின்றது. விஷயானுபவத்தை நாடி ஓடுகிறான். திருப்தியற்றவனாய் இருக்கின்றான். மயங்கிக் கிடக்கின்றான். இச்சையென்னும் வேட்கை தணியப்பெறாதவனாய் இருக்கின்றான். ஆனந்த ஊற்று தன்னிடை தன் ஆத்ம மயமாகவே இருக்கிறதென்பதை அறிகின்றானில்லை. பிரணவம் தான் அவனைத் தக்க வழியிலே கூட்டிச்செல்ல வல்லது. ஓம். அதுதான் ஆனந்த ரகசியத்தையும், பேரின்பத்தையும், சாந்தியையும், அழிவற்ற தன்மையையும் தோற்றுவிக்கின்றது. அ-உ-ம் என்பவைகளால் குறிக்கப்படும் மூன்று அவஸ்தைகளினின்றும் நீங்கி துரிய நிலையை அடைவிக்கப்படுகின்றான். அங்கே அந்த மௌன அமைதியில் தத்சொரூபத்தைக் காண்கின்றான். அதுவே அமாத்ரா ஆத்மா. அதுதான் லக்ஷியம்.

மிகவும் வியக்கத்தக்க இச்சிறு நூலில் சுவாமி அத்வயானந்தஜி செவ்வையாய் வெளிப்படுத்தியுள்ளதுபோல பிரணவத்தின் மாண்புகள் சொல்லற்கரியனவா யிருக்கின்றன. அநேக உபநிஷத முனிவர்கள் பிரணவத்தின் மஹிமையைக் கானம் செய்திருக்

கின்றூர்கள். அவைகளைத் தொகுத்து 'தத்துவ சாஸ்திரமும் பிரணவத் தியானமும்' என்னும் நூலில் யான் வெளியிட்டுள்ளேன். தெள்ளிய நடையில் சுவாமி அத்வயானந்தஜி பிரணவத்தின் அநேக கருத்துக்களை விவரித்துள்ளார்கள். இதைவிட, ஓங்காரத் தியானத்தின் அப்பியாசத்திற்குரிய அவரது போதனைகள் மிகவும் உபயோகமுள்ளனவாய் இருக்கின்றன. பிரணவ உபாசனைக்குச் சிறந்த வழிகாட்டியாகவுள்ள இந் நூலை வாசிக்கும் ஒவ்வொரு சாதகன் உள்ளமும் துலங்கிப் பிரகாசித்து, இறுதியில் பரம் பொருளை எய்தும் என்பது திண்ணம்.

ஸ்ரீ அத்வயானந்தஜி என்னும் துறவிராஜரை எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக! உங்கள் எல்லோரையும் இதே சென்மத்தில் ஆத்மானுபூதி யடையத் தகுதியுடையவர்களாகக் கடவுள் செய்வாராக!

ஆனந்தகுடீர்,
8—12—1948.

சுவாமி சிவானந்த

முன்னுரை

ஓங்காரம் பி^{3}ந்து^{3}ஸம்யுக்தம் நித்யம் த்^{4}யாயந்தி யோகி^{3}ந:
காமத^{3}ம் மோக்ஷத^{3}ம் சைவ ஓங்காராய நமோ நம:

பொருள்:— [பிந்துஸம்யுக்தம்] (ம்-என்னும்) விந்துவோடுகூடிய [ஓங்காரம்] ஓம்-என்னும் அக்ஷரத்தை [யோகிந:] யோகிகள் [நித்யம்] எப்பொழுதும் [த்யாயந்தி] தியானம் செய்கின்றார்கள். (அது) [ஏவ] உறுதியாக [காமதம்] விரும்பிய பொருளைக் கொடுப்பதாயும் [மோக்ஷதம் ச] மோக்ஷத்தை அளிப்பதாயும் (இருக்கின்றது. அத்தகைய) [ஓங்காராய] ஓம்-அக்ஷரத்திற்கு [நம:] நமஸ்காரம் [நம:] வணக்கம்.

ஓம்-என்பது எல்லா மந்த்ரங்களுக்கும் முதலில்சேர்த்து உச்சரிக்கவேண்டிய மந்த்ரமாம். இதைத் தனித்தும் ஜெபம் செய்யலாம். தியானம் செய்யலாம். ஓம் சேராத மந்திரம் ஓர் உயிருள்ள மந்திரமாகாது. சில நூற்களில் இம்மந்திரத்தைப்

பரமஹம்ஸ ஸங்நியாசிகளே தான் ஜெபம், தியானம் செய்யலாம். மற்றவர் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. சில நூற்களில் பிராம்மணர்கள் தான் ஜெபம் செய்யலாமென்றும், சில நூற்களில் பிராம்மண, க்ஷத்திரிய, வைசியர்கள் தான் செய்யலாமென்றும், சில நூற்களில் ஆண்கள் தான் ஜெபிக்கலாம், பெண்கள் ஜெபிக்கலாகாது என்றும்; சில நூற்களில் மோக்ஷம் ஒன்றை மட்டுமே விரும்புகின்றவர்கள் ஜெபிக்கலாமென்றும் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் ஜாதி, குல, சமய வித்தியாசமின்றி எல்லோருக்கும் பொதுவாக ஸ்ரீபதஞ்சலி பகவானால் இயற்றப்பட்டுள்ள யோக சாஸ்திரத்தில் ஓம்-என்பது ஒன்றேதான் கடவுளின்பெயர் என்றும் ஆதலால் எல்லோரும் அதன் அர்த்த பாவனையோடு ஜெபம் செய்தல் வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. ஆதலால் இம்மந்திரம் எல்லாமந்திரங்களுக்கும் மேலானது என்றும், இதை யோகிகள், முமுக்ஷுக்கள், ஆண்கள், துவிஜர்கள், பிராம்மணர்கள், சந்நியாசிகள், ஆகியவர்கள் தம் தமக்கே உரியதுஎன்று மிகுந்த விருப்பத்தோடு பேணிச் ஜெபிக்க வேண்டுமென்றும் தெரிகின்றது.

ஓம்-என்பதற்கு தாரக மந்திரமென்றும் ஓர் பெயருண்டு. தாரகம் = தாண்டச் செய்வது.

சமுத்திரத்தைத் தாண்டச்செய்வதால் கப்பலுக்குத்தாரகமென்று பெயராம். அதுபோல் இம்மந்திரம் ஜனன-மரணத் துன்பமாகிய சம்சார சமுத்திரத்தைத் தாண்டச் செய்து மோட்ச மென்னும் கரையில் சேர்ப்பதாம். ஆதலால் இதற்குத் தாரகமென்று பெயராம்.

சந்தஸ் சாஸ்திரத்தில் (யாப்பிலக்கணத்தில்)மெய்யெழுத்துக்களை எண்ணிக்கையில் சேர்ப்பதில்லை. ம்-என்பது மெய்யெழுத்து. ஆதலால் ஓம் என்பது ஏகாக்ஷர மந்திரமாம். ஏகாக்ஷரம்= ஒரு எழுத்து.

ஓங்காரம் அல்லது ஓம் என்னும் மந்திரத்திற்கு ப்ரணவம்-என்றோர் பெயருண்டு. (தமிழில் இதைப்பிரணவமென்று சொல்வதுண்டு.) ப்ர-என்பதும் நவ-என்பதும் வடமொழிப் புணர்ச்சிப்படி சேரும்போது ப்ரணவ மென்று ஆகின்றது (1) ப்ர=மிகவும், நவ-புதுமையானது. ஆதலால். ப்ரணவமென்றால் மிகவும்புதுமைபெற்றது என்று அர்த்தமாம். (2) ப்ர=மிகவும், நவ=புகழ் பெற்றது. என்றும் (3) ப்ர=பிரபஞ்சக்கடலை (கடக்க) நவ=கப்பலாவது என்றும் பொருள்படும். (4) ப்ர =பிரபஞ்சம், ந=இல்லை, வ:=உங்களுக்கு, ஆதலால் ப்ரணவ: என்பதற்கு இதை ஜபம் செய்கின்ற உங்களுக்கு பிரபஞ்சப் பற்று அல்லது துன்

பம் இல்லாமற் போகும் என்றும் பொருள்படும். (5) ப்ர=மிகவும், நவ=புதுமையை விளைவிக்கக்கூடியது. ஆதலால் இதை ஜெபம் செய்பவர்களுக்கு இது அஞ்ஞானத்தைநீக்கி பரமானந்தத் தன்மையை அளிக்கக் கூடியதென்று அர்த்தமாகும். இவ்வாறு ஓங்காரத்தின் பெயராகிய ப்ரணவம் என்பதற்கே அநேக அர்த்தங்களுள்ளன. உலகிலுள்ள எல்லா சாஸ்திரங்களுக்கும் மூலம் வேதங்களாகும். வேதங்களுக்கு மூலம் ஓம் என்பதாகும். ஓம் என்பதிலிருந்தே எல்லா வேதங்களும் மந்திரங்களும் பிறந்தன. ஆதலால் இதை ஜெபம் செய்வதாலேயே எல்லா மந்திரங்களின் பயனையும் அடையலாம்.

வேதத்திற்கு எப்படி பிரணவம் முதலாகவுள்ளதோ அவ்வாறு அரசர்களுளெல்லாம் வைவஸ்வதர் என்னும் மனு முதலானவராயிருக்கின்றார் என்று காளிதாசர் பிரணவத்தைப் புகழ்கின்றார். (ரகு-ஸர்-1-சு-11)

எல்லாவற்றிற்கும் முன்பு உண்டானது ஓங்காரமேயாகும். பிரம்மதேவர் வேதங்களை உச்சரித்த பிறகே உலகங்களை உண்டுபண்ணினார். அவர் வேதங்களைச் சொல்லத் தொடங்கியவுடன் முதன் முதலில் ஓம் என்பது அவர் கழுத்தைப்

பிளந்துகொண்டு தானாக வெளிவந்தது. இந்த ஓங்காரத்திற்குப் பொருள் சொல்லத் தெரியாமல் விழித்ததனாலேதான் பிரம்மாவை முருகக்கடவுள் குட்டிச் சிறையிலிட்டார். இந்தப் பிரணவத்தை யேதான் சுவாமி நாதராகிய முருகர் சிவனுக்கு உபதேசஞ்செய்தார்என்று புராணம்கூறுகின்றது.

உலகசிருஷ்டிக்காக வேண்டி சிவன் கையிலுள்ள உடுக்கையும், விஷ்ணுவின் கையிலுள்ள சங்கமும் இந்த ஓங்காரத்தையே சதா ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

வேதம் ஓதத் தொடங்கும் போதும் முடிக்கும்போதும் பிரணவத்தைச் சொல்லவேண்டும். முதலில் உச்சரிப்பது ஓதியவைகள் ஞாபகத்தில் பதிவதற்காகவும் முடிவில் உச்சரிப்பது கற்றவை மறக்காம லிருக்கும் பொருட்டுமாகு மென்று மனுபகவான் ஸ்மிருதியில் (அத் 2, சுலோ 74) கூறியுள்ளார். ஆகவே எல்லா சாஸ்திரங்களும் வேதத்தின் கருத்தைக் கூறுகின்றனவே யாதலால் கற்றவை மனத்தில் பதிந்து மறக்காமல் இருக்கும் பொருட்டு கற்கத் தொடங்கும்போதும் முடிக்கும் போதும் ஓங்காரம் சொல்ல வேண்டியதாகும்.

இந்தப் பிரணவத்தையே சூக்ஷ்ம பஞ்சாக்ஷரீ என்றும், பிரணவ பஞ்சாக்ஷரீ என்றும்,

முக்தி பஞ்சாக்ஷரீ என்றும் சைவர் கூறுவர். வைஷ்ணவர்கள் இதையே சூக்ஷ்ம அஷ்டாக்ஷரமென்று கூறுவர். இன்னும் இப் பிரணவத்தின் மகிமை சொல்லற்கியலாததாம். இத்தகைய பிரணவத்தை அர்த்தபாவனையோடு ஜப தியானங்கள் செய்து எல்லோரும் உய்யும் பொருட்டு இந்தப் பிரணவ தீபம் என்னும் நூலில் முன்னோர்கள் கண்டவழியே எளிய முறையில் முன்பு ஸ்ரீ வைஷ்ணவ அஷ்டாக்ஷரத்திற்கு அஷ்டாக்ஷர தீபத்தில் கண்டுள்ளவாறே பொருளைக் காண்போம்.

அத்வயானந்தம்,

சிவானந்த சாதன நிலயம்,

ஈங்கோய்மலை.

முசிறி தாலுக்கா, (திருச்சி ஜில்லா).

குளித்தலை S. I. R

பிரணவ தீபம்

ஓம்

*

ஓம் என்பது பிரம்மத்தின் பெயராம். இதனாலே பிரம்மக்ஞானிகளும் வேதங்களும் யக்ஞங்களும் முன்பு உண்டுபண்ணப்பட்டன. (ப. கீ. 17-அ. 23-சு)

ஆதலால் வேதம் உணர்ந்தோர்கள் செய்யும் யக்ஞம்—தானம்—தபஸ் ஆகிய கிரியைகள், எப்பொழுதும் விதிப்படி முதலிலும் முடிவிலும் ஓம் என்று சொல்லப்பட்டுக் குறைவின்றி நிறைவேறுகின்றன. (ப. கீ. 17 அ. 24 சு.)

ஓம் என்னும் ஓர் எழுத்து பிரம்மத்தைச் சொல்வதாம். இதைச்சொல்லிக் கொண்டும் என்னைத் தியானித்துக்கொண்டும் முடிவில் எவன் சரீரத்தை விடுகின்றானோ அவன் பரம கதியை அடைகின்றான். (ப. கீ. அ-8, சு. 13)

என்ற பகவான் வாக்கியங்களாலும் வேதத்தில் அநேக இடங்களில் கூறப்படுவதாலும் ஓம் என்னும் ஓரெழுத்து மந்திரத்திற்குப் பிரம்மம் பொருள் (அர்த்தம்) ஆகும். ஆதலால் 1. ஓம்=பிரம்மம்

"ஓம் என்ற இந்த எழுத்து இவை எல்லாமுமாம். அதாவது முற்காலத்தி லிருந்தவைகளும், தற்காலத்திலுள்ளவைகளும், பிற்காலத்தில் உண்டாகக் கூடியவைகளும் ஆகிய எல்லாம் ஓங்காரமேயாம். வேறு, மூன்று காலத்தையும் கடந்ததாய் யாதொன்றுளதோ அதுவும் ஓங்காரமேயாம்" என்று அதர்வ வேதமாண்டூக்கிய உபநிஷத்தின் முதல் மந்த்ரம் கூறுகின்றது.

பிரம்மத்தினின்றே பிரம்மா, விஷ்ணு ருத்திரன் ஆகிய மும்மூர்த்தி வடிவாகிய ஈஸ்வரனும், ஜீவர்களும், உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும், எல்லா உலகங்களும், சூரிய, சந்திர, நக்ஷத்திர, மேக, மின்னல், இடிகளும் ஆகிய எல்லாம் தோன்றுகின்றன. அந்தப்பிரம்மத்தின் பெயராகிய ஓம் என்பதினின்றே எல்லா எழுத்துக்களும், எல்லா மொழிகளும், வேதங்களும் மற்ற எல்லாச் சாஸ்திரங்களும் எல்லாப் பொருள்களின் பெயர்களும் தோன்றுகின்றன.

ஒவ்வொரு எழுத்தையும் நாம் சொல்லும் போது முதலில் உள்ளிருந்து நாதமென்னும் ஒலியை எழுப்பி கழுத்து, மேல்வாய், அடி, நடு, நுனி நாக்குகள், பல்லினடி, பற்கள், உதடுகள், மூக்கு ஆகியவைகளைச் சேர்த்தல், பிரித்தல், தொடுதல், வளைத்தல், மூடுதல், திறத்தல் முதலிய தொழில்க

ளால் நாம் அவ்வெழுத்துக்களைப் பிறருக்குத் தெரியும்படி உச்சரிக்கின்றோம். ஓம் என்னும் எழுத்தை நாம் சொல்லும்போது அப்படியே உள்ளிருந்து ஒலியை எழுப்பிக் கழுத்திலிருந்து ஆரம்பித்து உதடுவரை வாயிலுள்ள எல்லா அவயவங்களையும் குழாய் போலக் குவித்து உதடுகளை மூடிக்கடைசியில் மூக்கின் வழியாய் ஒலியை வெளியில் விடுகின்றோம். இப்படிச் செய்வதால் எல்லா எழுத்துக்களையும் உச்சரிக்க நாம் செய்யும் முயற்சிகள் எல்லாவற்றையும் ஓம் என்னும் ஓர் எழுத்தை உச்சரிக்கும்போதும் செய்கின்றோம். ஆகவே ஓம் எழுத்தை உச்சரிப்பதால் எல்லா மொழியிலுமுள்ள எல்லா எழுத்துக்களையும் உச்சரிப்பதாகின்றது.

ஓம் என்ற எழுத்தினின்றே எல்லாச்சப்தங்களும் பிரிவதால் எல்லாச் சப்தங்களும் சேரும்போது ஓம் என்றஒலியே உண்டாகின்றது. இதைச் சந்தைக் கூட்ட ஒலி, திருமண ஒலி, வேதகோஷம் ஆகியவெல்லாம் ஒன்று சேர்ந்து கேட்கத் தகும் ஓரிடத்திலிருந்து கேட்டால் தெரியவரும். அப்போது ஓம் என்ற ஒலியே உண்டாகும். நாம்மூச்சு விடும்போதும் இழுக்கும் போதும் அதனல் நம் உடலிலுள்ள ரத்தம் ஓடும் போதும் இந்த ஓங்கார ஒலியே உண்டாகின்றது. இரண்டு காதுகளையும் விரல்களால் மூடிக்கொண்டு கேட்டால் இதுதெரியவரும். எல்லா வாத்தியங்களினின்றுமுண்டாவ

தும் மணி ஓசையில் உண்டாவதும் ஓங்காரத் தொனியே யாகும்.

மேற்கூறிய காரணங்களால் எல்லாச் சப்தங்களுக்கும் அர்த்தங்களாகிய எல்லாப் பொருள்களும் ஓம் என்ற சொல்லால் சொல்லப்படுகின்றன. ஆகவே 2. ஓம் = எல்லாம் (சர்வம்)

விநாயகரின் வடிவம் ஓம் என்னும் பிரணவ வடிவமாம். எல்லாத் தேவர்களிலும் முதன்மையானவர் விநாயகர். எல்லா மந்திரங்களிலும் முதன்மையானது ஓம். ஆதலால் ஓம் என்பது விநாயகர் பெயர். ஆறு ஆதாரங்களுக்குள் மூலாதாரத்தில் இருப்பவர் விநாயகர். அங்குள்ள எழுத்து ஓம். ஆகவே 3. ஓம் = விநாயகர்.

ஆறுதாரப் பொருளாகிய முருகருடைய முதல் முகம் விநாயகர் சொரூபம். ஆகவே

4. ஓம் = முருகக்கடவுளின் முதல் முகம்.

சிவபெருமானுக்கு முருகர் தன் சொரூபத்தையே ஓங்காரத்தின் அர்த்தமாக உபதேசித்தார் என்று சொல்லப்படுகின்றது. ஆகவே

5. ஓம் = முருகக்கடவுள்.

எல்லாச் சொற்களின் வடிவமே சரஸ்வதி

யின் வடிவமாம். சொல், மொழி என்பதற்கே வட மொழியில் சரஸ்வதி, பாரதி, வாக், வாணி என்று சொல்லப்படுகின்றன சொல்நாவிலிருந்தேஉண்டாகின்றது இதுபற்றியே வாக்தேவியாகியசரஸ்வதி பிரம்மாவின் நாவிலிருக்கிருள்என்று சொல்லப்படுகின்றது. சரஸ்வதி எல்லாச் சொற்களின் வடிவமாவதுபோல் ஓம் என்பதும் எல்லாச் சொற்களின் வடிவமாம்.சரஸ்வதியும் வெண்மைநிறம். பிரணவத்திற்கும் நிறம் வெண்மை. ஆதலால் ஓம் என்பது சரஸ்வதியின் பெயராம். ஆகவே 6 ஓம்= சரஸ்வதி

இன்னும் 7.ஓம்= பிரம்மா; 8.ஓம்=விஷ்ணு; 9. ஓம்=ருத்திரன்; 10. ஓம்=மஹேஸ்வரன்; 11.ஓம்= சதாசிவன்; 12. ஓம் =சர்வதேவர் ஆதலால் எந்த தேவதையும் ஓம் என்ற மந்திரத்தால் ஜபித்தற்குரியதாம்.

யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆம் (அது சரி) என்பதற்குப் பதிலாக ஓம் என்று கூறுவர். வேதத்திலும் யக்ஞம் முதலிய எல்லாக் கிரியைகளையும் குற்றமின்றி நிறைவேற்றி வைப்பது ஓம் என்னும் மந்திரமாம். ஆதலால் தீமை தவறின்றிச் சரியாக முற்றுப்பெற்ற நன்மையெல்லாம் ஓம் ஆகும்.

ஓங்காரமும் அத-என்னும் சப்தமும் ஆகிய இரண்டும் சிருஷ்டியின் ஆரம்பமாகிய முற்காலத்

தில் பிரம்மாவின் வாயினின்றும் முதலில் உண்டானது ஆதலால் அவை இரண்டும் மங்கலத்தைத் தருவதாம் என்று சுலோகமும் உள்ளது. ஆகவே:

13. ஓம்=தீமையின்றிய நன்மை (மங்கலம், சுபம்)

வடமொழி இலக்கணப் (குண சந்தியின்) படி அகரமும் உகரமும் சேர்ந்து ஓகாரம் ஆகின்றது. ஆதலால் அ+உ+ம். இம்மூன்றெழுத்தும் சேர்ந்தது ஓம். வாயைத் திறந்தவுடன் உண்டாவது அ. வாயைக் குழாய்போல் குவிக்கும்போது உண்டாவது உ, உதடுகளை மூடும் போதுண்டாவது ம். ஓம் என்று சொல்லும்போது இம் மூன்று வேலைகளையும் செய்கின்றோம். ஆதலால் ஓம் என்பதில் அ+உ+ம் என்னும் மூன்றெழுத்துக்களும் இருக்கின்றன.

அ என்பது சிவன் பெயர். உ என்பது ஜீவன். ம் என்பது மாயை அல்லது ஜகத். அ-பதி உ-பசு, ம்-பாசம். ஆகவே:

14. ஓம்=சிவ-ஜீவ-ஜகத்
ஓம்=பதி-பசு-பாசம்

'அகாரோவை ஸர்வா வாக்' என்று வேதம் கூறுவதால் அகாரம் சப்தப் பிரபஞ்சம், அல்லது ஒலி உலகம். உகாரம் அர்த்தப்பிரபஞ்சம் அல்லது பொருள் உலகம். மகாரமென்னும் ம் இரண்டு

பிரபஞ்சத்திற்கும் காரணமான மாயை. ஆகவே
15. ஓம்=ஒலி-பொருள் உலகங்களோடு கூடிய மாயை.

அ என்பது அருவம். உ என்பது உருவம். ம் என்பது ரூபாரூபம். ஆகவே:
16. ஓம்=அருவமும் உருவமும் உருவாருவமுமாகிய பொருள்.

அ-பிரம்மா, உ-விஷ்ணு, ம்-ருத்திரன்
ஆகவே 17. ஓம்=மும்மூர்த்திகள்

அ-வெண்மை நிறம், உ-செம்மை, ம்-கருமை
ஆகவே 18. ஓம்=வெண்மை, செம்மை, கருமைகள்.

அ-ஜாக்ரம் (கனவு), உ-சொப்பனம் (கனவு), ம்-சுஷுப்தி (உறக்கம்). ஆகவே
19. ஓம்=ஜாக்ர-சொப்ன-சுழுத்தி அவஸ்தைகள்.

அ-உதாத்தம், உ-அநுதாத்தம், ம்-ஸ்வரிதம். ஆகவே: 20. ஓம்=உதாத்த அநுதாத்த சுவரிதமென்னும் வேத சுரங்களாம்.

அ-சத்துவகுணம், உ-ரஜோகுணம், ம்-

தமோ குணம். ஆகவே: 21. ஓம்=சத்துவ-ரஜோ-தமோ குணங்கள்.

அ-படைத்தல், உ-காத்தல், ம்-அழித்தல். ஆகவே: 22. ஓம்=படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலேயும் உடையது.

அ-ருக்வேதம், உ-யஜுர்வேதம், ம்-சாம வேதம். ஆகவே: 23. ஓம்=மூன்று முக்கிய வேதங்கள்.

அ-சுவர்க்கலோகம், உ-மத்தியபூவுலகம், ம்-பாதாள உலகம். ஆகவே 24. ஓம்=மூவுலகங்கள்.

25 அ-என்பது ஸர்வ ரக்ஷகரும், லக்ஷ்மி நாயகருமாகிய நாராயணராம். இந்த அ என்பதனோடு நான்காம் வேற்றுமை உருபு புணர்ந்து கெட்டிருப்பதால் அ-என்பதற்கு: உயிருக்காகவே உடலுள்ளது. உயிருக்கு உடல் சாதனமாம். அதாவது சேஷமாம். ஆகவே உயிர் சேஷியாம். இது போன்றே நாராயணருக்கே எல்லா ஜீவர்களும் சாதனம். அதாவது சேஷமாயிருப்பதால் எல்லா ஜீவர்களாகிய உடல்களுக்கும் நாராயணரே உயிராகியசேஷியாயிருக்கின்றூர் என்று அர்த்தமாகிறது.

உ-என்பது நிச்சயம் (உறுதி) என்னும்

பொருளுடையது. ஆதலால் ஜீவர்களுக் கெல்லாம் நாராயணரோடு மட்டுமே தொடர்புண்டு, மற்றவரோடு தொடர்பில்லை. அதாவது ஜீவர்கள் நாராயணருக்கே சேவை செய்துகொண்டு அவரிடத்திலேயே இன்பமாய் இருந்து கொண்டு இருக்க வேண்டும் என்று அர்த்தமாகிறது.

ம்-என்பதற்கு அர்த்தம் ஆத்மாவாம். ஆதலால் ஓம் என்பதற்கு ஜீவனுகிய ஆத்மா தனக்கு உயிராகவுள்ள நாராயணருக்கே உரியவன். அவருக்கே சேஷனுயிருக்கின்றான். அவரையே தியானிக்க வேண்டும். வேறு ஒரு பொருளிலும் பற்று வைத்தலாகாது என்று அர்த்தமாகிறது.

இனி இந்த ஓங்காரம் நான்கு பாகமாகப் பிரிக்கப்படும். அகாரம், உகாரம், மகாரம். இவைகளோடு அர்த்த மாத்திரை, அல்லது அமாத்திரை என்பன பிரணவத்தின் நான்கு பாதங்களாம். பாதம் என்பதற்கு நான்கில் ஒன்று என்று அர்த்தமாம். மனிதனின் கால்கூட முழங்கால் வரை உடலில் நான்கில் ஒரு பாகமாய் இருப்பதாலும் மிருகங்களுக்கு நான்கு கால்கள் இருப்பதாலுமே கால்களுக்குப் பாதம் என்று பெயர் வந்தது. ஓங்காரத்தின் முதல் பாதம் அகாரம்; அதாவது-அ. இரண்டாவது பாதம் உகாரம்; அதாவது- உ.

மூன்ருவது பாதம் மகாரம்; அதாவது-ம். நான்காவது பாதம் அர்த்த மாத்திரை அல்லது அமாத்திரை. அதாவது ஓம் என்று உச்சரிக்கும்போது உண்டாகும் அ+உ+ம் என்னும் மூன்றெழுத்திலும் தொடர்ந்து தெளிவில்லாமல் உண்டாகும் சூட்சும நாதமாகிய ஒலி அணுக்களாம். அ-இறந்தகாலம்; உ-நிகழ்காலம், ம்-எதிர்காலம்; அர்த்த மாத்திரை-காலங்கடந்தது. ஆகவே

26. ஓம்=முக்காலமும், காலங்கடந்ததுமாம்.

27. ஏழு தாதுக்களாலாகிய இந்த ஸ்தூல சரீரம்-அ. இந்த ஸ்தூல சரீரத்தின் உள்ளிருந்து கொண்டு இச்சரீரத்தைப் பலவிதமான வேலைகளைச் செய்யச் செய்வதும் இந்தஸ்தூல சரீரத்தின் மூலம் எல்லாவற்றையும் அறிந்து அனுபவிக்கச் செய்வதுமாகிய சூட்சும சரீரம்.உ. இவ்விரண்டு சரீரத்திற்கும் காரணமாய் பல ஜென்மங்களில் செய்த கர்மவாசனைகளோடுகூடிய அஞ்ஞானமாகவுள்ள காரண சரீரம்-ம். இம்மூன்று சரீரங்களினுள்ளேயுள்ள ஆன்மா-அ மாத்திரையாம். ஆகவே:- ஓம்=மூன்று சரீரங்களோடுகூடிய ஆன்மா.

28. ஜீவன், மூன்று சரீரங்களோடும் கூடி வெளியுலகப் பொருள்களை அறிந்தனுபவித்துக் கொண்டிருக்கின்ற நனவு (ஜாக்ர) நிலை-அ என்று சொல்லப்படும். ஸ்தூல சரீரத்தைவிட்டுக் காரண

சூட்சும சரீரங்களோடு கூடி மனோராஜ்யம் செய்து கொண்டிருக்கும் சொப்பன (கனவு) நிலை உ என்று சொல்லப்படும். ஸ்தூல சூட்சும சரீரங்களைவிட்டுக் காரண சரீரத்தோடு கூடி ஒன்றையும் அறியாது தூங்கும் சுழுத்தி நிலை ம்-என்று சொல்லப்படும். காரண சரீரத்தையுங் கடந்து ஆன்மாவில் லயித்து நிற்கும் நனவிற் சுழுத்தியாகிய துரியநிலை அமாத்திரையென்று கூறப்படும். ஆகவே:- ஓம் = ஜாக்ர, ஸ்வப்ந, ஸுஷுப்தி, துரிய அவஸ்தைகளாம்.

29. ஒரே ஜீவனுக்கு அபிமானத்தால் நான்கு பெயர்கள் உண்டாகின்றன. அஃதெப்படியெனில்; ஒரு மனிதன் ஒரு அரசனிடத்தில் இனுமாகவோ தான் உழைத்த வேலைக்குக் கூலியாகவோ மிகுதியான விளை நிலங்களைப் பெறுகின்றான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அம்மனிதன் அந்த விளை நிலங்களை யெல்லாம் என்னுடையன என்றும், நான் மிகுந்த பூஸ்திதியுடையவன் என்றும் அபிமானிக்கின்றான். அப்போது அந்தச் சாதாரண மனிதனுக்கே ஜமீன்தார் அல்லது மிராஸ்தார் என்ற பெயர் உண்டாகின்றது. பிறகு அம்மனிதன் இந்த நிலங்களையெல்லாம் விற்றுவிட்டுப் பணத்தையெல்லாம் ஒரு பேங்கில் போட்டுவிட்டு, வரும் வட்டியைக் கொண்டு ஜீவிக்கின்றான். அப்போது அவனுக்கு அந்நிலங்களெல்லாம் தன்னுடையன என்னும் அபிமானமில்லை. அந்நிலத்தில் யார் என்ன செய்தாலும்

கோபிப்பதுமில்லை. ஆனால் பாங்கில் இருக்கும் பணத்தில் மட்டும் என்னுடையது என்றும், நான் பணக்காரன் என்றும் அபிமானம் உள்ளது. அப்போது அவனுக்கு ஜமீன்தார் அல்லது மிராசுதார் என்ற பெயர் இல்லை. தனவான், பணக்காரன் என்ற பெயர் உள்ளது. பிறகு அம்மனிதன் தன் மனைவி மக்களிடத்தில் அப்பொருள்களை ஒப்படைத்து விட்டுத் தான் குருவையடையும் பொருட்டுத் தேசாந் தரியாய்ப் போய்விடுகின்றான். அப்போது அவனுக் குப் பொருளில் அபிமானமில்லை. சந்நியாசி, துறவி என்று சொல்லப்படுகின்றான்.

இவ்விதமே ஜீவன் வெளிப் பொருள்களை அறிந்தனுபவித்துக் கொண்டிருக்கின்ற நனவு (ஜாக்கிர) நிலையில் தன் ஸ்தூல சரீரத்தை நானென் றபிமானிக்கின்றான். அப்போது அந்த ஜீவனுக்கு விஸ்வன் என்றும் அ-என்றும் பெயர் உண்டாகின் றன. கனவு கண்டு கொண்டிருக்கும்போது இந்த ஸ்தூல சரீரத்தை மறந்து சொப்பனத்தில் தோன் றும் சூட்சும சரீரத்தை நானென்றபிமானிக்கின்றான். அப்போது அந்த ஜீவனுக்கே தைஜஸன் என்றும்-உ-என்றும் பெயராம். தூங்கும்போது நான் ஒன்றும் தெரியாமல் சுகமாகத் தூங்குகின்றேன் என்று காரண சரீரத்தை நானென்றபிமானிக்கின்றான். அப்போது அந்த ஜீவனுக்கே ப்ராக்ஞன் என்றும்-ம்-என்றும் பெயராம். நனவிற் சுழுத்தியாகிய துரிய நிலையில்

நிஷ்டையிலிருக்கும்போது ஒரு சரீரத்திலும் அபிமானமின்றி தான் சச்சிதானந்தவடிவ ஆத்ம சொரூபமாகவே யிருக்கின்றான். அப்போது அந்த ஜீவனுக்கே கூடஸ்தன் என்று பெயராம். இந்தக் கூடஸ்தனே ஓம் என்பதிலுள்ள நான்காவது பாதமாகிய அமாத்திரையால் சொல்லப்படுகின்றான். ஆகவே:—
ஓம்=விஸ்வ, தைஜஸ, ப்ராஜ்ஞ, கூடஸ்தர்கள்.

30. ஜீவனுக்கு இருப்பது போன்றே ஈஸ்வரனுக்கும் அபிமானத்தால் நான்கு பெயர்கள் உண்டு. எல்லா ஜீவர்களுடைய ஸ்தூல சரீரத்தையும், ஸ்தூல பஞ்ச பூதங்களாலாகிய எல்லா உலகத்தையும் ஈஸ்வரர் நானென்றபிமானிக்கின்றார். அப்போது அவருக்கு விராட் என்றும்-அ-என்றும் பெயர். எல்லாச் சீவர்களுடைய சூட்சும சரீரங்களையும் எல்லா சூட்சும பஞ்ச பூதங்களையும் ஈஸ்வரன் நான் என்று அபிமானிக்கும்போது அவருக்கு ஹிரண்யகர்ப்பர் என்றும்-உ-என்றும் பெயர். எல்லாவற்றையும் உண்டுபண்ணுவதற்குக் காரணமாய மாயை ஈஸ்வரனுக்குக் காரண சரீரமாம். அந்தக் காரண சரீர மாயையை நானென்றபிமானிக்கின்றபோது ஈஸ்வரனுக்கு அந்தர்யாமியென்றும்-ம்-என்றும் பெயராம். இந்த ஈஸ்வர-ஸ்தூல, சூட்சும, காரண சரீரங்களோடு கலப்பின்றித் தனித்து நிற்கும் கடவுளுக்குப் பிரம்மம் என்று பெயராம். இந்தப் பிரம்மமே ஓங்காரத்தின்

நான்காவது பாதமாகிய அமாத்திரையால் குறிக்கப்படுவதாம். ஆகவே:— ஓம்=விராட்டு, ஹிரண்ய கர்ப்பர், அந்தர்யாமி, பிரம்மங்களாம்.

இனி, நம:சிவாய என்பது ஸ்தூல பஞ்சாக்ஷரமென்றும், சிவ பஞ்சாக்ஷரமென்றும் பெயர் பெறும். இதனையே சைவர்கள் முதலில் சமய தீக்ஷை செய்துகொள்ளும்போது குருவின்பால் உபதேசம் பெறுகின்றார்கள். இந்த ஐந்தெழுத்துக்களும் ஓங்காரத்தினின்றே உண்டாகின்றன. இந்த ஐந்தெழுத்துக்களும் பிரணவத்தில் சூட்சுமமாக அடங்கிக்கிடக்கின்றன. சைவர்கள் கடைசியாகச் செய்துகொள்ளும் நிர்வாண தீக்ஷையின் போது பிரணவத்தையே உபதேசம் பெறுகின்றார்கள். ஆதலால் பிரணவத்திற்குச் சூட்சும பஞ்சாக்ஷரீ என்றும் பெயர் உண்டு. முக்தி ஒன்றையே விரும்புகின்றவர்கள் இதனையே ஜெபித்துத் தியானம் செய்வதாலும் இது ஐந்தாகப் பிரிக்கப்படுவதாலும் இதற்கே முக்தி பஞ்சாக்ஷரமென்றும் பெயராம். அந்த ஐந்து பிரிவுகள் எவை என்றால்:- அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து என்பனவாம். அதாவது, அ + உ + ம் என்னும் எழுத்துக்

களும், ஓ......ம்... என்று சொல்லும்போது நீண்டு தொடர்ச்சியாக உண்டாகும் ஒலியாகிய நாதமும், ம்-என்று சொல்லி முடிக்கும்போது உண்டாகும் கடைசி முடிவொலியாகிய விந்துவும் ஆகும். அவற்றின் அர்த்தமாவது:—31. அ=பிரம்மா உ=விஷ்ணு. ம்=ருத்ரன். விந்து=மஹேஸ்வரன் நாதம்=சதாசிவன். ஆதலால் ஓம்=பஞ்சமூர்த்திகள். அல்லது 32. அ=ருத்ரன், உ=மஹேஸ்வரன், ம்=சதாசிவன், நாதம்= நாததத்துவம், விந்து=விந்துதத்துவம்.

33. அ-சிருஷ்டி செய்வது. உ-ஸ்திதி செய்வது. ம்-சம்ஹாரம் செய்வது. விந்து-மறைத்தல் செய்வது. நாதம்-அருள் செய்வது. ஆகவே:— ஓம் = பஞ்ச கிருத்தியம் செய்வதாம். அல்லது

34. ஓம் = பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் பஞ்ச சக்தியாம். அல்லது 35. அ=சரஸ்வதி உ=லக்ஷ்மி. ம்=பார்வதி. விந்து=மஹேஸ்வரி. நாதம்=மனோன்மணி.

36. அ—இடைகலை நாடியாம். உ—பிங்கலை நாடியாம். ம்-ஸுஷும்னா நாடியாம். நாதம்-இடைகலை பிங்கலைகளால் பூரகம் செய்து கும்பித்த வாயுவால் மூலாதாரத்திலுள்ள குண்டலிசக்தியை விழிக்கச்செய்து தசவித நாதங்களையும் உண்டு பண்ணுவதாம். விந்து—சுக்கிலமென்னும் விந்து

வை ஊர்த்துவரேதஸாகச் செய்து பிரம்மநிஷ்டை யிலிருத்தலாம். ஆகவே:- ஓம் = பிராணுயாம ராஜ யோக சமாதி நிலையை வருவிப்பதாம்.

ஓம் நமோ நாராயணுய என்பது நாராயண அஷ்டாக்ஷர மென்றும் ஸ்தூல அஷ்டாக்ஷர மென் றும் பெயர் பெறும். இதன் அர்த்தங்களின் விரி வை சிவானந்த சாதன நிலையத்தின் 8-வது வெளி யீடாகிய ஸ்ரீ அஷ்டாக்ஷர தீபத்தில் காணலாம். இந்த அஷ்டாக்ஷரமும் பிரணவத்திநின்று முண்டானதேயாம். அஷ்டாக்ஷரம் பிரணவத் தில் சூக்ஷமமாக அடங்கியுள்ளது. அதனுல் இதற்குச் சூட்சும அஷ்டாக்ஷரமென்று பெய ராம். சைவர்கள் கடைசியில் பிரணவத்தையே சூட்சும பஞ்சாட்சரமாக உபாசிப்பதுபோல் வைஷ் ணவர்களும் கடைசியில் இந்த பிரணவத்தையே சூட்சும அஷ்டாக்ஷரமாக உபாசிக்க வேண்டும். இதன் விவரம் யஜுர் வேதத்திலும் சாமவேதத் திலுமுள்ள தாரஸார உபநிஷத்தில் கூறப்பட்டுள் ளது. அது வருமாறு:—

ஓங்காரத்தில் முதல் எழுத்து-அ. இரண் டாவது எழுத்து-உ. மூன்றுவது எழுத்து-ம். நான்காவது எழுத்து விந்து. ஐந்தாவது நாதம். ஆறுவது கலை. ஏழாவது கலாதீதை. எட்டாவது அக்ஷரம் தற்பரமாம். இதுவே சம்சார சமுத்தி

ரத்தைத் தாண்டச் செய்வதால் தாரகமாம். அகாரத்தினின்றும் பிரம்மாவின் அம்சராகிய ஜாம்பவான் உண்டானார். உகாரத்தினின்றும் உபேந்திர (சுக்கிரீவ) ரென்னும் வானரத் தலைவருண்டானார். மகாரத்தினின்றும் சிவசொரூபராகிய ஹநுமார் உண்டானார். விந்து ஈஸ்வரனென்று பெயருடையதாம். அதினின்றும் ஈஸ்வர சக்ர சொரூபராகிய சத்துருக்கனருண்டானார். நாதமே சங்கமென்று பெயருடைய பரதராகிய மஹாபிரபுவானது. கலையினின்றும் ஸாக்ஷாத் புருஷரும் லோகநாயகருமாகிய லக்ஷ்மணருண்டானார். கலாதீதையே ஸீதையென்று பெயருடைய பகவதியாளுள். தற்பரமென்னும் பரமாத்மாவே புருஷோத்தமராகிய ஸ்ரீராமரானார். இவ்வாறு எட்டுவிதமாயுள்ள இப்பிரணவ மந்திரத்தைச் செபிப்பதனல் மிகுந்த பரிசுத்தத்தையடைந்து இதிகாசபுராணருத்திரங்களை நூறுயிரம் முறை படித்த பலனையடைகின்றான். காயத்திரி மந்திரத்தை நூறுயிரம் ஜெபித்ததாகின்றது. இவனுக்குப் பத்துத் தலைமுறை முன்னோர்களையும் பத்துத் தலைமுறை பின்னோர்களையும் புனிதப்படுத்துகின்றான். கடைசியில் நாராயணருடைய பரமபதத்தை யடைகின்றான். என்று தாரஸார உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளதால்:—

37. ஓம்—ஜாம்பவான், சுக்கிரீவ, ஹநுமான்,

சத்துருக்ன, பரத, லக்ஷ்மண, சீதா சமேத ஸ்ரீராமமூர்த்தியைக் குறிக்கின்றது.

38. ஓம்=சர்வம். அதாவது, ஆனது, ஆகத்தக்கது, இனிஆவது, வேறுமுள்ள தத்துவம், மந்திரம், வர்ணம், தேவதை, சந்தசு, ரிக்கு, கலை, சக்தி, சிருஷ்டி என்னும் சர்வமுமாம். (தாரஸாரம்)

அதர்வ வேத நாரத பரிவிராஜக உபநிஷத்திலுள்ளபடி:— ஓம் என்பது ஓரெழுத்து மந்திரமென்றும் அதற்குப் பிரம்மமே அர்த்தமென்றும் சொல்லப்படுவதால் அது வியஷ்டி பிரணவமென்றும் பிரம்மப் பிரணவமென்றும் சொல்லப்படும். ஓம் என்பது பலபாகங்களாகப் பிரிக்கப்படுமென்றும் ஒவ்வொரு பாகத்திற்கும் பல அர்த்தங்கள் உளவென்றும் அவ்வெல்லாப் பொருள்களும் பல பாகங்களையுடைய ஓம் என்பதனுல் குறிக்கப்படுமென்றும் சொல்லப்படுவதால் அதற்குச் சமஷ்டிப் பிரணவமென்று பெயராம். வியஷ்டி=தனியானது. சமஷ்டி=பல சேர்ந்தது. ஓம் என்பதே கடைசியில் எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்வதாம். ஆதலால், சம்ஹாரப் பிரணவம் என்று சொல்லப்படும். அதுவே எல்லாவற்றையும் தோற்றுவிப்பதால் சிருஷ்டிப் பிரணவமாம். மனதிற்குள்ளேயே நினைக்கப்படுவதால் அந்தர்ப்பிர

ணவமாம். வெளியிலும் வாயால் உரத்து உச்சரிக்கப்படுவதால் பஹிர்ப் பிரணவமாம். இரண்டு விதமாகவும் உள்ளதால் உபயாத்மகப் பிரணவமாம். வைதிகர்கள் செய்யும் எல்லா விவகாரங்களுக்கு முரியதாதலால் வியாவஹாரிகப் பிரணவமாம். ரிஷிகளால் தியானிக்கப்படுவதால் ஆர்ஷப்பிரணவமாம். சகல உலக சராசரப் பொருள் வடிவாயுள்ளதால் விராட் பிரணவமாம். பிரணவத்தின் நான்கு பாதங்களில் கடைசியான அர்த்தமாத்திரையே முக்கியமானதால் அர்த்தமாத்ரா பிரணவமாம். சகுண ஈஸ்வரனைத் தியானித்தற்குரியதாதலால் சகுணப் பிரணவமாம். நிர்க்குணப் பிரம்மத்தைத் தியானித்தற்குரியதாதலால் நிர்க்குணப் பிரணவமாம். இவ்வாறு பல பெயர்களையுடைய பிரணவமானது —அ+உ+ம்+அர்த்தமாத்திரை+நாதம்+விந்து+கலை+சக்தி என்று எட்டு பிரிவாகப் பிரிக்கப்படும்.

39. இவற்றுள் விந்து வரையிலுமுள்ள ஆறு பாகங்களும் அவற்றின் அர்த்தங்களும் முன்பு சொல்லப்பட்டுள்ளன. கலை என்பது நாதத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து அவற்றின் ஒவ்வொரு பாகத்திற்கும் பெயராம். பிரணவத்திற்கு அளவற்ற சக்தியுள்ளது. அது தன்னைச் செபிப்பவர்களின் ஆவரண—மல—விக்ஷேபங்களையெல்லாம் போக்கிச் சுத்தப் பிரம்மமாக்கும். தியானத்திற்கு

முன் பலமுறை உரத்து உச்சரிப்பதால் மனதிற்கு ஏகாக்கிரத்தை உண்டுபண்ணும். இராவணன் இராமர்மேல் ஓர் சக்தி ஆயுதத்தை ஏவியபோது அதை வேறொரு விதத்தாலும் அழிக்க முடியாதென்று கருதி ஸ்ரீராமர் தான் செபித்து வந்த பிரணவத்தை உரத்து "ஹோம்" என்று உச்சரித்தார். உடனே அச்சக்தியஸ்திரம் பல சுக்கலாய்த் தூளானது. பிறரால் ஏவப்பட்ட எந்த மந்திரத்தின் சக்தியும் ஓம் என்பதை உச்சரிப்பதால் கெட்டுப்போகின்றது. இத்தகைய பிரணவத்தின் சக்தியே இங்கு அதன் 8-வது பகுதியாகிய சக்தியாம். கலை யென்பது கலா தத்துவத்தையும், 64 விதமான சகல கலைகளையும், சந்திரன் முதலான எல்லாப் பொருள்களின் ஒவ்வொரு பாகத்தையும் குறிப்பதாம். சக்தி என்பது சக்தி தத்துவத்தையும், சகல பொருள்களிலுமுள்ள சர்வ சக்தியையும் குறிப்பதாம்.

40. இன்னும் இந்தப் பிரணவம், அ + உ + ம் + அர்த்தமாத்திரை + நாதம் + விந்து + கலை + கலாதீதை + சாந்தி + சாந்தியதீதை + உன்மனீ + மனோன்மனீ + புரீ + மத்யமை + பச்யந்தீ + பரைஎன்று பதினாறு பாகமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாத்திரையும் (பாகமும்) அந்த அந்தப் பெயருடைய தத்துவங்களைக் குறிக்கின்றன.

41. மேற்கூறிய பதினாறு மாத்திரையும் ஒவ்வொன்று நன்னான்காகப் பிரிக்கப்பட்டு அறுபத்துநான்கு மாத்திரையாகவும், அவை ஒவ்வொன்றும் பிரகிருதி-புருஷன் என்னும் வேற்றுமையால் இரண்டிரண்டாகப் பிரிக்கப்பட்டு நூற்றிருபத்தெட்டு மாத்திரைகளாகி சகுண நிர்க்குணத் தன்மைகளையடைந்து பிரம்மப் பிரணவம் ஒன்றாயினும் அது எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய சர்வேஸ்வரனாகின்றது.

42. இன்னும் அகார உகார மகார அர்த்த மாத்திரையென்னும் நான்கு பாதத்திலும், அகாரம் பதினாயிரம் அவயவங்களை யுடையது. உகாரம் ஆயிரம் அவயவங்களை யுடையது. மகாரம் நூறு அவயவங்களையுடையது. அர்த்த மாத்திரை அனந்தாவயவங்களை யுடையது என்று நாரத பரிவ்ராஜக உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய சொல்லிற்கடங்காத பெருமையினையுடைய ஓங்காரமாகிய பிரணவத்தைப்பத்து லக்ஷம் உருச்செபித்த பிறகு எந்த மந்திரத்தைச் செபித்தாலும் அம்மந்திரங்கள் அவசியம் பலனைத் தருவனவாகும். பிரணவத்தை ஒரு லக்ஷம் உருச் செபித்தால் ஒரு புரச்சரணமாகும். ஒரு புரச்சரணத்திற்கு ஒரு ஹோமம் சொல்லப்பட்டுள்ளது. அதனைப் புரச்சரண ஹோம விதியில் காண்க.

43. இந்தப் பிரணவம் மஹா வாக்கியங்களின் அர்த்தத்தையே முக்கியமாக வுடையதாம். அதாவது:- அ என்பது ஈஸ்வரனும், உ என்பது ஜீவனும், ம் என்பது பிரம்மமாம். ஆகவே, ஓம் என்பதற்கு ஈஸ்வரனும் ஜீவனும் உண்மையில் (பாரமார்த்திகமாக) பிரம்ம மாகவே இருக்கின்றார்கள் என்று அர்த்த மாகின்றது. ஆதலால், மனிதராய்ப் பிறந்த ஒவ்வொரு ஜீவனும் தம்முடைய பாரமார்த்திக யதார்த்த நிலையாகிய பிரம்ம சொரூபத்தை யடைதலாகிய மோக்ஷத்தை யடைய முயற்சிக்க வேண்டும். அம்மோக்ஷத்தைப் பெறும் பொருட்டுப் பிரணவத்தை உபாசனை செய்யும் முறை இங்கே கூறப்படுகின்றது.

இந்தப் பிரணவ உபாசனை முறை அதர்வ வேத மாண்டூக்கிய முதலிய உபநிஷத்துக்களில் கூறப்பட்டுள்ளது. அதை விளக்கி ஆசார்யர்கள் பஞ்சீகரணம், அதன் வார்த்திகம் முதலிய நூற்களில் கூறியுள்ளார்கள். அவையே இங்கு முறைப் படுத்தி எழுதப்படுகின்றன.

பிரணவ சமாதி முறை.

விடியற்காலை 4மணிக்கு எழுந்து அவரவர் செய்யும் நித்திய காலைக் கர்மானுஷ்டானங்களை விரைவில் முடித்துக் கொண்டு பரிசுத்தமான

உடல், உடையுடன் பரிசுத்தமாகவும், ஏகாந்தமாக வும் உள்ள ஓரிடத்தில் நல்லதொரு ஆசனத்தில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி, தலை கழுத்து முதுகுகள் வளையாமல் நேராக நிமிர்ந்து உட் கார்ந்து கொள்ள வேண்டும்.

பிறகு ஓம்என்னும் மந்திரத்தை ஓ-என்பது சுமார் மூன்று மடங்கு நேரமும்-ம்-என்பது சுமார் அரைப்பங்கு நேரமும் இருக்கும்படி மூச் சுத் தாங்கும் வரை நீட்டியும் உரத்தும் பலதரம் சொல்ல வேண்டும். பின் வர வர மெதுவாகக் குறைத்து மனத்திற் குள்ளே பலமுறை சொல்ல வேண்டும். (இதற்காகச் சாதாரணமாய் ஓய்வா யிருக்கும் காலங்களில் ஓம் என்று உரத்தும் நீட் டியும் உச்சரித்து ஒருமுறை சொல்ல முடிந்த நேரத்தை ஏழு பாகமாகப் பிரித்து ஆறு பாக நேரம் ஓ-என்றும் ஒரு பாக நேரம்-ம்-என்றும் சொல்லிப் பழகிக் கொள்ள வேண்டும்.) இப்படி ஓம் என்பதைச் சொல்லும் பொழுதே அடியிற் கண்டவாறு அதன் அர்த்தத்தையும் சிந்திக்க வேண்டும்.

ஓம் என்றால் பிரம்மம். பிரம்மமே மனத் திற்கும் வாக்கிற்கும் எட்டாததாய்க் கடந்தும் எல்லாவற்றின் உள்ளேயும் இருப்பதால் கடவுள் என்று சொல்லப்படுகின்றது. இது பத்துத் திக்

கும் நிறைந்து அவற்றிற்கும் அப்பாலாகி எல்லை யற்றதாய் உள்ளது. இப்பிரம்மம் என்றும் மாறு படாததாகியும் எப்போதும் அழிவின்றியதாகியும் இருக்கின்றது. அது ஒரே அறிவு மயம். அறிவே அதன் வடிவம். பேரறிவுப் பிழம்பு. அறிவுச் செறி வு. ஞானக்கட்டி. இதனிடத்தினின்றேதான் ஈஸ் வரனுக்கும் ஜீவர்களுக்கும் அறிவு கிடைக்கின்றது. பிரம்மம் இல்லாவிட்டால் ஈஸ்வரனுக்கும் ஜீவர் களுக்கும் அறிவு உண்டாகாது. ஈஸ்வரன் அழிவ தாயினும் அழிவுறாத ஓம் என்னும் பிரம்மமாகிய பேரறிவுப் பொருளானது ஆனந்த மயமானது. பேரின்பமே வடிவமானது. பேரின்பப் பிழம்பு. ஆனந்தக் கட்டி. இந்த அழிவற்ற அறிவானந்தப் பிரம்மத்தின்கண், மனம் இலய மடையும்போது புத்தியில் தோற்றுகின்ற இன்பத்திற்குச் சமான மாக இந்திரனும், சந்திரனும், ஈஸ்வரனும் சுகா னந்தத்தை அனுபவிப்பதில்லை. இந்த உண்மை யறிவானந்தமாகிய இடவெல்லையும், காலவெல் லை அற்ற பிரம்மப் பொருளானது பெரும் ஜோதி மயமானது. மத்தியான்ன சூரியன் பிரகாசிக்கும் போது மற்ற நக்ஷத்திரங்கள் பிரகாசிக்காதது போன்று இந்தப் பரஞ்ஜோதிக்கு முன்பு கோடிக் கணக்கான சூரியர்களும் பிரகாசிக்க மாட்டா. அத்தகைய பெருஞ் ஜோதி. அதனுடைய ஒரு சிறிது ஒளியைப் பெற்றேதான் இந்தச் சூரியனும் சந்திரனும், அளவற்ற நக்ஷத்திரங்களும், மின்னல்

களும், விளக்குகளும், நெருப்பும் ஒளிவிடுகின்றன. அந்தப் பரம்ஜோதியினாலேதான் உலக மெல்லாம் விளங்குகின்றன. ஆயினும் அந்தப் பிரம்மத்தைக் கண்களால் காணமுடியாது. எந்தக் கண்ணாடியா லும் காணமுடியாது. பிரகாசமான சூரியனை ஆந் தைகள்பார்க்கமுடியாததுபோல நம்கண்கள் எந்த உபாயத்தாலும் அதைக் காணமாட்டா. இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த ஜோதிப்பொரு ளின்கண்ணே அளவற்றஅற்புதம்வாய்ந்த ஓர்சக்தி யிருக்கின்றது.கிளிஞ்சிலில்வெள்ளி இல்லையாயினும் சூரிய ஒளியில் வெள்ளியைத்தோற்றுவிக்கின்றது. கயிறுஇரவில் பாம்பைத்தோற்றுவிக்கின்றது. நிற மில்லாதஆகாசம் நீலநிறத்தைத் தோற்றுவிக்கின் றது. கானல், ஏரி நீரைத் தோற்றுவிக்கின்றது. ஆகவே கிளிஞ்சில், கயிறு, ஆகாசம், கானல் இவை களிடத்தில் பொய்ப் பொருளைத் தோற்றுவிக்கும் சக்தி யிருக்கின்றது. அதுபோல் ஈஸ்வரன், ஜீவர் கள் எல்லா அண்டங்கள், சகல உலகப்பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும் தோற்றுவிக்கும் சக்தி பிரம்மத்தில் இருக்கின்றது. இந்தச் சக்திக்கு பிர கிருதி என் றுபெயர். மூலப்பிரகிருதிஎன்றுஞ்சொல் வதுண்டு. இந்தப்பிரகிருதியென்னும் சக்தியோடு கூடிய உண்மை அறிவானந்த ஜோதிப் பிரம்மமே ஓம்-என்பதாம். ஓம் என்று உரத்து உச்சரிக்கும் போதும், மெதுவாக உச்சரிக்கும் போதும், ஓம் என்று மனத்திற்குள் நினைக்கும் போதும் இத்

தகைய பிரம்மத்தைச் சிந்திக்க வேண்டும். அது எங்கேயோ இருக்கின்றது என்று நினைக்கக் கூடாது. அதுவே எல்லோருக்கும் ஆத்மாவாக இருக்கின்றது. எல்லா ஜீவர்களுக்குள்ளும் நிறைந்து எல்லா அண்டங்களிலும் செறிந்து, அப்பாலாயும் இருப்பதால் அது பரமான்மாவாம். அந்தப் பரமான்மாவே நமது வடிவமாம். ஆதலால் ஓம் என்று சொல்லும்போது இந்த உடம்பை மறந்து, நாம் எல்லையற்ற அறிவானந்த ஜோதி மயமாகி என்றும் எவ்விடத்தும் இருக்கின்றோம் என்று தியானிக்கவேண்டும். ஓம் என்றுசொல்லும்போது இத்தனை உணர்ச்சியோடு இருந்து உடல் உலகங்களை யெல்லாம் மறக்க வேண்டும். ஓம் என்ற பொருளோடு ஒன்றுபட வேண்டும்.

ஓங்காரம் நான்கு பாகமுடையதாய் இருப்பதுபோல அதன் பொருளாகிய பிரம்மமும் நான்கு பாகமுடையதாய் இருக்கின்றது. அ+உ+ம்+அமாத்திரை என்று ஓம் என்பது நான்குபாகமாம். இதில் அமாத்திரை உண்மையறிவானந்த ஜோதியான சுத்தப் பிரம்மத்தைக் குறிப்பதாம். அந்தப் பிரம்மத்தினிடத்திலுள்ள பிரகிருதி யென்னும் சக்தி, சத்துவம், ரஜஸ், தமஸ் என்று மூன்று பாகமாகவுள்ளது. சத்துவ குணம் நல்ல பெரிய நிலைக் கண்ணாடி போன்றுள்ளது. ரஜோ குணம் பளபளப்பான உலோகத் தகடுகள் போன்றுள்ளது. தமோ

குணம் சிலேட்டுக் கற்பலகை போன்றுள்ளது. சத்துவ குணம் பிரம்மத்தினிட மிருந்து மிகுந்த அறிவைப் பெற்று மிகவும் பிரகாசிக்கும். ராஜோ குணம் பிரம்மத்தின் முன்னிலையில் நன்ருகத் தொழில் செய்யும். தமோ குணம் இயக்கப்பட்டுத் தொழில் செய்யுமே யன்றித் தானுக இயங்காத தாயும் அறிவின்றியதாயும் இருக்கும். சத்துவ குணம் பிரகாசத்திற்கும், வெள்ளை நிறத்திற்கும், பகற்காலத்திற்கும் சமானமானது. ரஜோ குணம் தெளிவான பொருளுக்கும், சிகப்பு நிறத்திற்கும், சந்தியா காலத்திற்கும் சமானமானது. தமோ குணம் தெளிவற்ற பொருளுக்கும், கரு நிறத்திற்கும், இரவிற்கும் சமானமானது. சத்துவ குணத்திற்கு ப்ர-என்று பெயராம். ரஜோ குணத்திற்கு க்ரு-என்று பெயராம். தமோ குணத்திற்கு தி-என்று பெயராம். ஆதலால், ப்ரக்ருதி என்ருல் சத்துவம்-ரஜஸ்-தமஸ் என்னும் மூன்று குணங்களும் கூடியதாம். இந்த மூலப் பிரகிருதியின் சத்துவ குணத்திற்கு மாயையென்றும் வித்தையென்றும் பெயர். ரஜோ குணத்திற்கு அவித்தையென்றும் அஞ்ஞான மென்றும் பெயர். ரஜோ குணம் அளவற்றனவாகப் பிரிந்துள்ளதால் அவித்தைகள் என்று பெயராம். தமோ குணம் ஆவரண சக்தி, விக்ஷேப சக்தி யென்று இரண்டாகப்பிரிந்துள்ளது. இந்த ஆவரண சக்திதான் நாம் பிரம்

மம் என்று நம்மை நாம் உணராதபடி மறைத்து இந்தத் தேகமே நாம் என்று உணரும்படி செய்கின்றது. இந்தப் பிரணவ சமாதி முறையைப் பழகி 'நாம் பிரம்மமா யிருக்கின்றோம்' என்ற திட அனுபவ ஞானம் உண்டானவுடன் இந்த ஆவரண சக்தி கெட்டுப்போகின்றது. விக்ஷேப சக்தியினின்றுதான் எல்லா உலகமும் உண்டாகின்றன. இந்த ஆவரண சக்தியும் விக்ஷேப சக்தியும் சேர்ந்தது தமப் பிரகிருதியாம். ஆகவே இந்த ஓம் என்னும் பிரம்மமும் மாயை, அவித்தைகள், தமப்பிரகிருதி சுத்தப்பிரம்மம் என்று நான்கு பாகமாகவுள்ளது. ஆதலால், அ = மாயை, உ = அவித்தைகள், ம் = தமப் பிரகிருதி, அமாத்திரை = சுத்தப்பிரம்மம். இந்த நான்கும் சேர்ந்த பொருளே ஓம் என்று சிந்தனை செய்ய வேண்டும்.

பிரகிருதியின் சத்துவ குணமாகிய மாயை ஒன்றாகவே இருக்கும். ரஜோ குணமாகிய அவித்தைகளைப் போலப் பலவாக இராது. இன்னும் அந்த மாயை நல்ல நிலைக்கண்ணாடியைப் போல மிகத் தெளிவானதாய் இருக்கும். கண்ணாடியில் சூரியனின் பிரதிபிம்பம் சூரியனைப் போலவே பிரகாசமாய் விழுவது போன்று இந்த மாயையிலும் பிரம்மத்தின் பிரதிபிம்பம் மிகவும் நன்றாய் விழுகின்றது. இந்த மாயையிலுள்ள பிரம்மப் பிரதி

பிம்பமே ஈசுவரன், இயவுள், இறைவன் என்று சொல்லப்படுகின்றது. இந்த ஈசுவரரே உலகை யெல்லாம் படைத்தல், காத்தல், அழித்தல்களைச் செய்கின்றவர். இந்த இயவுளுக்கு அந்த மாயை (வித்தை) காரண சரீரமாய் இருக்கின்றது. இந்த காரண சரீரமான மாயையோடு கூடியே இறைவர் முற்றறிவுடையவராய் எல்லாவற்றையும் அறிந்து சர்வசக்தி யுடையவராய் எல்லாவற்றையும் செய்கின்றார். இந்த ஈசுவரனுக்கே பிரம்மா, விஷ்ணு, சிவன், சக்தி, கணேசர், முருகர், அல்லா, இயேசு, அருகர், ஜினர் என்றெல்லாம் ஒவ்வொருவர் ஒவ்வொரு பெயர் சொல்லுகின்றார்கள். இந்த இயவுளே அவரவர் விரும்பிய உருவத்தோடு அவரவர்க்குத் தோன்றுகின்றார். எல்லா மதத்திலும், எல்லா மொழியிலு முள்ள இறைவனின் எல்லாப் பெயர்களும் இந்த ஒரு ஈசுவரனின் பெயரேயாம். இவரே எல்லாப் பொருள்களினுள்ளும் எல்லா ஜீவர்களினுள்ளும் இருந்து எல்லாவற்றையும் அசைத்து ஆட்டிவைப்பவர் ஆதலால் இந்த ஈசுவரனுக்கே சர்வாந்தர்யாமி அல்லது அந்தர்யாமி என்று பெயராம். ஈசுவரர் தனது காரண சரீரத்தோடு கூடியிருந்து அதை நானென்று அபிமானிப்பதுபோ லுள்ளபோது அவருக்கு ஜகத் காரணர் என்றும், அக்ஷராத்மா வென்றும் பெயராம்.

முன் சொல்லப்பட்ட பிரகிருதியின் ரஜோ குணங்கள் பளபளப்பான உலோகத் தகடுகள் போல அல்லது அழுக்கடைந்து உடைந்த கண்ணுடித் துண்டுகள் போலப் பலவாக இருக்கின்றன. இந்த அவித்தைகளிலும் பிரம்மத்தின் பிரதிபிம்பங்கள் விழுகின்றன. இந்த அவித்தைகளிலுள்ள பிரம்மப் பிரதிபிம்பங்களே ஜீவர்கள் என்றும் இயமானர்கள் என்றும் சொல்லப்படுகின்றன. இந்த ஜீவர்களைத்தான் பிரகிருதியின் தமோ குணத்திலுண்டான ஆவரண சக்தி மறைத்திருக்கின்றது. இந்த ஆவரண சக்தியுங் கெட்டு, அவித்தையும் கெட்டுக் கண்ணுடி தூளானவுடன் கண்ணுடியிலுள்ள சூரியப் பிரதிபிம்பம் சூரியனேடு சேர்ந்துவிடுவது போல ஜீவன் பிரம்மத்தோடு ஒன்ருக ஆகிவிடுவதே மோக்ஷமாகும். இந்த மோக்ஷம் அடைவதற்கேதான் நாம் பிரணவ சமாதி முறையைப் பழகுகின்ருேம். ஜீவர்களுக்கு அவித்தைகள் (அஞ்ஞானங்கள்)தான் காரணசரீரங்கள். ஜீவன் மோக்ஷம் அடையாவிடின் ஆவரண சக்தி கலந்துள்ள அவித்தையாகிய காரண சரீரத்தோடு வேறு சூட்சும சரீரங்களையும் ஸ்தூல சரீரங்களையும் எடுத்து எடுத்துப் பிறந்து பிறந்து, இறந்து இறந்து சுவர்க்கத்திலும், பூமியிலும், நரகத்திலும் சுழன்று சுழன்று துன்பத்தையே அடைந்துகொண்டிருக்கும். ஈசுவரரேதான் இந்த ஜீவர்

களை அவரவர் கர்மத்திற்குத் தக்கபடி சரீரத்தைக் கொடுத்துப் பிறப்பிறப்புச் சுழலிற் சுழற்றி விடுகின்றார்.

ஈசுவரர் தமப்பிரகிருதியிலுள்ள விக்ஷேப சக்தியை சப்தகுணமே வடிவமான சூட்சும ஆகாசமாகச் செய்கின்றார். சூட்சும ஆகாசத்தின் கொஞ்ச பாகத்தைக் கொண்டு ஆகாசத்தினின்று மூதாதையின் சொத்துப்போல் வந்த குணமாகிய சப்தமும் சொந்த குணமாகிய ஸ்பரிசமுமே வடிவமான சூட்சும வாயுவை உண்டு பண்ணுகின்றார். சூட்சும வாயுவின் கொஞ்ச பாகத்தைக்கொண்டு வாயுவினின்றும் வந்த குணங்களாகிய சப்த ஸ்பரிசமும் சொந்த குணமாகிய ரூபமுமே வடிவமான சூட்சும தேயுவென்னும் அக்கினியை உண்டுபண்ணுகின்றார். அந்தச் சூட்சும தேயுவின் கொஞ்ச பாகத்தை யெடுத்து தேயுவினின்று வந்த குணங்களாகிய சப்த, ஸ்பரிச, ரூபங்களும் சொந்த குணமாகிய ரசமுமே வடிவமான சூட்சும அப்பு வென்னும் ஜலத்தை உண்டுபண்ணுகின்றார். அந்தச் சூட்சும அப்புவில் கொஞ்சபாகத்தை யெடுத்து வந்த குணங்களாகிய சப்த ஸ்பரிச ரூப ரசங்களும் சொந்த குணமாகிய கந்தமுமே வடிவமான சூட்சும பிருதிவி யென்னும் மண்ணை உண்டுபண்ணுகின்றார். இவ்வாறு சூட்சும பஞ்ச பூத சிருஷ்டி உண்டா

னது. இந்தச் சூட்சும பூதங்களுக்குத் தன் மாத்திரைகள் என்று பெயர்.

இந்தச் சூட்சும பஞ்ச பூதங்களிலும் ஒவ்வொரு பூதத்திலும் சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் இருக்கின்றன. பூதத்தின் சத்துவ குண பாகமானது அறிவுக் குரிய கருவிகளாகும். ரஜோ குண பாகமானது வேலைக் குரிய கருவிகளாகும். தமோ குண பாகமானது இருவகைக் கருவிகளும் இருப்பதற்கும் அவைகளால் இயக்கப்படுவதற்கும் உரிய பொருள்களாகும். எவ்வாறெனில்:—

ஈஸ்வரனுடைய சங்கல்பத்தினல் சூட்சும ஆகாசத்தின் சத்துவ குணத்தில் சிறிது பாகமானது காதுக்குள்ளிருந்து சப்தங்களை அறியும் கருவியாகவுள்ள சுரோத்திர (செவி) இந்திரியமாகின்றது. இதுபோன்றே சூட்சும வாயுவின் சத்துவ குணத்தில் சிறிது பாகமானது உடம்பு முழுவதுமிருந்து, குளிர், வெப்பம் முதலிய உணர்ச்சிகளை யெல்லா மறியும் கருவியாகிய துவக்கு (மெய்) இந்திரியமாகவும், சூட்சும தேயுவின் சத்துவத்தில் கொஞ்சபாகம் கண்ணிலிருந்து நிறங்களை அறியும் கருவியாகிய சக்ஷு (கண்) இந்திரியமாகவும், சூட்சும அப்புவின் சத்துவத்தில் கொஞ்சபாகம் நாவிலிருந்து சுவையை யறியும் கருவியாகிய

ஜிஹ்வா இந்திரியமாகவும், சூட்சும பிருதிவியின் சத்துவகுணத்தில் சிறிதுபாகமான து மூக்கிலிருந்து மணத்தையறியும் கிராண (மூக்கு) இந்திரியமாகவும் ஆகின்றன. இந்த சுரோத்திர-துவக்கு-சட்சு-ஜிஹ்வா-கிராணமென்னும் ஐந்தும் பஞ்ச பூதங்களின் சத்துவ குண பாகத்திலிருந்து உண்டாகின்றனவாதலின் அறியும் கருவி (இந்திரியங்)கள் ஆகின்றன. ஆதலால் இவ்வைந்திற்கும் ஞானேந்திரியம் எனப்பெயராம்.

இவ்வாறே ரஜோ குணமாகவுள்ள சூட்சும ஆகாசத்தின் சிறிது பாகத்தினின்றும் வாயிற்குள்ளிருந்து வாயைப் பேசும்படி செய்யும் வாக்கு (வாய்) இந்திரியமும், வாயுவின் ரஜோ குணத்தில் சிறிது பாகத்தினின்றும் கைகளை வேலை செய்யச் செய்யும் பாணி (கை) இந்திரியமும், இவ்விதமே தேயுவினின்றும் கால்களை நடக்கச் செய்யும் பாத (கால்) இந்திரியமும், அப்புவினின்றும் மலத் துவாரமாகிய குதத்திலிருந்து மலஜலங்களை வெளியே தள்ளச்செய்யும் பாயு (கண்ணி) இந்திரியமும், ஜலத் துவாரமாகிய குஹ்யத்திலிருந்து கடினப்படுத்திச் சுகத்தினையுண்டுபண்ணும் உபஸ்த(குறி) இந்திரியமும் உண்டாயின. இந்த வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்னும் ஐந்தும் பஞ்ச பூதங்களின் ரஜோ குண பாகத்திலிருந்து உண்டாயினவாதலின் தொழில்செய்யும்கருவிகளாயின.

ஆதலால், இவை பஞ்ச கர்மேந்திரியம் எனப் பெயர் பெறும். ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து ஆகப்பத்தும் ஒவ்வொரு பூதத்தினின்றும் தனித் தனியாக உண்டானதால் தத்தமக்குச் சுபாவமான ஒவ்வொரு காரியத்தையே செய்கின்றன. ஒவ்வொன்றும் மற்ற இந்திரியங்களின் காரியங்களைச் செய்யமாட்டா.

ஆகாசம் முதலான சூட்சும பூதங்களின் ஐந்து சத்துவ குணபாகங்களிலிருந்தும் இன்னும் சிறிது சிறிது எடுத்து ஒன்றாகச் சேர்த்து இறைவன் அந்தக்கரணங்களை யுண்டுபண்ணுகின்றார். அந்தக்கரணமும் சத்துவ குணத்தினின்றும் உண்டானதால் பொருள்களை அறிவதற்குக் கருவியாயிருக்கின்றது. ஐந்து பூதங்களும் சேர்ந்து உண்டானதால் ஐந்து ஞானேந்திரியங்கள் வழியாக வரும் எல்லாவற்றையும் அறிகின்றது. ஜீவர்கள் கருவிகளின் உதவியின்றித் தாமே நேராக எந்தப் பொருளையும் அறிவது இல்லை. சப்தம் (ஒலி), ஸ்பர்சம் (ஊறு), ரூபம் (ஒளி), ரஸம் (சுவை), கந்தம் (மணம்) என்னும் ஐந்து புலன்களும் முதலில் நம் உடம்பில் விழுகின்றன. பிறகு உடலில் அந்த அந்த இடத்தில் இருக்கும் உணர்ச்சி நரம்புகளில் உணரும் சக்தி வடிவாகவுள்ள ஞான இந்திரியங்கள் (அறிவுப் பொறிகள்) அப்புலன்களை அறிந்து அந்தக் கரணத்திற்குக் கொடுக்கின்றன. அந்தக் கரணமே

அவற்றை ஜீவனுக்குக் கொடுக்கின்றது. ஆகவே, ஜீவன் புலன்களை அறிவதற்குஉடலிலுள்ள ஞான இந்திரியமாகிய புறக்கருவிக்கு உள்ளேயுள்ள இந்தக் கருவியே காரணமாயிருப்பதால் அதற்கு அந்தக் கரணம் (உட்கருவி) என்று பெயருண்டாகின்றது.

இந்த அந்தக்கரணம் ஒன்றாகவேயிருந்தாலும், ஐந்து பூதங்களின் சேர்க்கையாயும் ஐந்து இடங்களிலிருந்து ஐந்து தொழில்களைச் செய்வதாயும் இருப்பதால் ஐந்து பெயர்களை யடைகின்றது. முதலில் அந்தக்கரணத்திலுள்ள ஆகாசப் பகுதி உச்சியிலுள்ள மூளையில் இருந்துகொண்டு ஆகாசம்போல ஞானேந்திரிய மூலமாக எல்லா விஷயங்களையும் உள்ளே கிரகித்து(இழுத்து)வைத்துக்கொள்ளுகின்றது. இதினின்றுதான் நமக்கு எந்த விஷயமும் நினைவிற்கு (ஞாபகத்திற்கு) வருகின்றன. அந்தக்கரணத்தின் இந்தப் பாகத்திற்கு பிரஜ்ஞா (உள்ளம்) என்று பெயர். உள்ளத்தில் பதிந்த விஷயங்களை யெல்லாம் பின் வாயுப்பகுதி கழுத்திலிருந்துகொண்டு ஒவ்வொன்றாக நினைத்தும் அதை மறந்து வேறொன்றை நினைத்தும் இவ்வாறு சதா வாயுவைப் போல அலைந்துகொண்டிருக்கின்றது. இப்பாகத்திற்கு மனம் (நினைவி) என்று பெயர். தேயுப் பகுதி இருதயத்தில் இருந்துகொண்டு நினைவில் வந்த விடயங்களை யெல்லாம்

ஆராய்ந்து விளக்கைப் போல, இது சரி, இது தவறு; இது நன்மையானது, இது தீயது; இது இன்பம் பயப்பது, இது துன்பம் பயப்பது; இது இத்தகையது என்று முடிவுகட்டு (நிச்சயிக்)கிறது. இப்பாகத்திற்குப் புத்தி (விளக்கி) என்று பெயர். அப்புப்பகுதி நாபியி லிருந்துகொண்டு நீரைப் போல புத்தியால் தீர்மானிக்கப்பட்ட தொவ் வொன்றையே விடாமற்பற்றி அதனையே சிந்திக் கின்றது. இதுவே தியானத்திற்கு உரியது. இப் பாகத்திற்கு சித்தம் (கௌவி) என்று பெயர். அந் தக்கரணத்தின் பிருதிவிப் பகுதியானது உடல் முழுவதும் வியாபித்து இருந்துகொண்டு இவற் றையெல்லாம் நானே அறிந்தேன், தியானித்தேன், செய்தேன், என்னையன்றி யாரும் அறியவும், தியா னிக்கவும், செய்யவும் முடியாது; ஆதலால் நானே சிறந்தவன் என்று அஹங்கரிக்கின்றது. அந்தக் கரணத்தின் இப்பாகத்திற்கு அஹங்காரம் (நா னென்பது)என்று பெயர். இவ்வாறு ஓரே அந்தக் கரணம் பிரக்ஞை (உள்ளம்), மனம் (நினைவி), புத் தி (விளக்கி), சித்தம் (கௌவி), அஹங்காரம் (நா னென்பது) என்னும் ஐந்து பெயர்களைப் பெறு கின்றது.

பின்னும் ஆகாச முதலான சூக்ஷ்ம பூதங் களின் ஐந்து ரஜோகுண பாகங்களினின்றும்

சிறிது சிறிது எடுத்து ஒன்ருகச் சேர்த்து இயவுள் பிராண சக்தியை உண்டுபண்ணுகின்ருர். பிராண சக்தி ரஜோ குணத்தினின்று முண்டானதால் தொழில் செய்யுங் கருவியா யிருக்கின்றது. ஐந்து பூதங்களும் சேர்ந்து உண்டானதால் ஐந்து கர்மேந்திரியங்களையும் தொழில் செய்யும்படி இயக்குகின்றது. இந்தப் பிராண சக்தியும் ஒன்ருகவே யிருந்தாலும் ஐந்து பூதங்களின் சேர்க்கையாயும் ஐந்து இடங்களிலிருந்து ஐந்து தொழில்களைச் செய்வதாயும் இருப்பதால் ஐந்து பெயர்களைப் பெறுகின்றது. பிராண சக்தியிலுள்ள ஆகாசப் பகுதி ஆகாசத்தைப்போல உடல் முழுவதும் வியாபித்து உடம்பை உறுதியாக நிறுத்தி வைத்திருக்கின்றது உடலிலிருந்து ஜீவன் போனவுடன் இது போய்விட்டதனுலேதான் கழுத்து, கை, கால் முதலியவை துவண்டு தளர்ந்து விடுகின்றன. பிராண சக்தியின் இந்தப் பாகத்திற்கு வியானன் என்று பெயர். வாயுப் பகுதி மார்பிற்கும் வயிற்றிற்கும் நடுவிலுள்ள தசைத் துண்டத்திலிருந்துகொண்டு மார்பு எலும்புக் கூட்டினையும் இருதயத்தையும் சுவாசப் பைகளையும் விரியச் செய்தும் சுருங்கச் செய்தும் வெளிக் காற்றினை மூக்கின் வழியாக உடலுக்குள் இழுத்தும் வெளியே தள்ளியும் இவ்வாறு சுவாசத்தை வாங்கி விடச் செய்துகொண்டே யிருக்கின்றது.

இந்தப் பாகத்திற்குப் பிராணன் என்று பெயர். தேயுப் பகுதி அடிவயிற்றின் அடிப்பாகத்தில் உஷ்ணமாக இருந்து உண்ட அன்னத்தை நன்ரு கச் சீரணம் செய்து அன்ன ரசத்தை உடலில் உறிஞ்சுகின்றது. இந்தப் பாகத்திற்கு அபானன் என்று பெயர். அப்புப் பகுதி, நாபியிலிருந்து கொண்டு அபானனுல் உறிஞ்சப்பட்ட அன்ன ரசத்தை உடல் முழுவதும் நாடிகள் மூலமாகச் சமானமாகச் செலுத்துகின்றது. இந்தப் பாகத் திற்குச் சமானன் என்று பெயர். பிராண சக்தி யின் பிருதிவிப் பகுதி கழுத்தில் கடினமாக இருந்துகொண்டு உண்ட அன்னங்களைக் கடைகின் றது. பிராண சக்தியின் இந்தப் பாகத்திற்கு உதானன் என்று பெயர். இந்தப் பிராண சக்தி ஐந்தும் முதலில் வாயுவை இயக்கி அதன்மூலம் எல்லா வேலைகளையும் செய்கின்றபடியால் இவற் றிற்கும் வாயு என்றும் பெயர் உண்டு. இவ்வாறு ஒரே பிராண சக்தி வியான வாயு, பிராண வாயு, அபான வாயு, சமான வாயு, உதான வாயு என்று ஐந்து பெயர்களைப் பெறுகின்றது.

ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங் கள் ஐந்து, அந்தக்கரணம் ஐந்து, பிராண சக்தி ஐந்து ஆக இருபது தத்துவங்களும் ஜீவனுக்குச் சூட்சும சரீரமாம். எல்லாச் சீவர்க

ளுடைய எல்லாச் சூட்சும சரீரங்களும் சூட்சும பூதங்கள் எல்லாமும் சேர்ந்து இயவுளுக்குச் சூட்சும சரீரமாம். சூட்சும சரீரம் என்றால் நம்மால் பிரத்தியக்ஷமாய் அறிய முடியாமல் இருக்கின்ற நுண்ணுடல் என்று அர்த்தமாம். ஈஸ்வரன் சூட்சும சரீரத்தோடு கூடியிருந்து அதை நானென்றபிமானிப்பதுபோலுள்ளபோது அவருக்கு ஹிரண்ய கர்ப்பர் என்றும் சூத்ராத்மா என்றும் பெயராம்.

சூட்சும பூதங்களைப் பஞ்சீகரணம் செய்து இறைவன் ஸ்தூல பூதங்களை உண்டுபண்ணுகின்றார். பஞ்சீகரணம் என்றால் ஐந்து பூதங்களையும் ஐயைந்தாகப் பிரித்துப் பின் ஐயைந்தாகச் சேர்த்து ஐந்து பூதங்களை யுண்டுபண்ணுவதாம். எவ்வாறெனில், தமோ குணமாகவுள்ள ஐந்து சூட்சும பூதங்களையும் ஒவ்வொன்றை இரண்டிரண்டாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அரைப் பாகத்தைப் பிரிக்காமல் வைத்துவிட்டு ஒவ்வொரு அரைப் பாகத்தை நன்னான்காகப் பிரித்து இவ்வாறு ஒவ்வொரு பூதத்தையும் ஒரு அரைப் பாகமும் நான்கு அரைக்கால் பாகமுமாக ஐயைந்து பாகமாகப் பிரித்து வைத்துக்கொண்டு பின் ஒவ்வொரு பூதத்திலுமுள்ள முழு அரைப் பாகத்தோடு மற்ற நான்கு பூதங்களிலுமுள்ள ஒவ்வொரு அரைக்கால் பாகத்தைச் சேர்த்து

விடுதல். இப்படிக் கலப்பதனுல், பாலோடு சிறிது மோரைக் கலப்பதனுல் கட்டித் தயிராகவும், பிராண வாயுவையும் நீரக வாயுவையும் கலப்பதனுல் தண்ணீராகவும் ஆவதுபோல் நம்மால் கண்கூடாக அறிய முடியாமல் நுட்பமாக விருக்கும் சூட்சும பூதங்கள் கண்கூடாக இருக்கும் பருமையான ஸ்தூல பூதங்களாக ஆகின்றன. இந்த ஸ்தூல பூதங்களில் பிருதிவிதான் இந்த மண் பூமியாகவும், செவ்வாய்-புதன் முதலிய கிரகங்களாகவும் இருக்கின்றது. அப்புத்தான் சமுத்திரம் முதலிய நீர் நிலைகளாகவும், சந்திரன் முதலிய உபக்கிரகங்களின் மேற் பரப்புகளாகவும் இருக்கின்றது. தேயுதான் நாம் எரிக்கின்ற நெருப்பாகவும், சூரியன் முதலிய நட்சத்திரங்களாகவும் இருக்கின்றது. வாயுதான் நாம் சுவாசிக்கின்றதும் நம்மேல் படும்படி வீசுகின்றதுமாகிய காற்ருக இருக்கின்றது. ஆகாசந்தான் எங்கும் நிறைந்து எல்லாப் பொருள்களும் இருப்பதற்கும் போவதற்கும் இடந்தந்து கொண்டிருக்கின்ற வானமா(ஈதரா)க இருக்கின்றது.

இந்தப் பஞ்ச ஸ்தூல பூதங்களையே இறைவன் நாம் உண்ணும் அன்னமா(உணவா)க மாற்றி அன்னத்தையே ஏழு தாதுக்களாக இருக்கின்ற நம் ஸ்தூல சரீரமாக ஆக்குகின்ருர். நம் பருவுடலி

(ஸ்தூல சரீரத்தி)லுள்ள ஏழு தாதுக்கள் எவை யெனில், உரோமம், நகம் இவைகளோடு கூடிய தோலாகிய சர்மம். 1. வியர்வைநீர் முதலியவற் றோடு கூடிய இரத்தமாகிய ருதிரம். 2. கொழுப் போடு கூடிய தசையாகிய மாம்ஸம். 3 நரம்பாகிய ஸ்நாயு. 4. எலும்பாகிய அஸ்தி. 5. எலும்புகளுக் குள்ளும் தலையிலும் இருக்கும் மூளையாகிய மஜ் ஜை. 6. இரத்தத்தினின்று முண்டாகிப் புத்திர உற்பத்தியைச் செய்யும் ஆண்களிடத்திலுள்ள சுக்லம் (வெள்ளை) அல்லது பெண்களிடத்திலுள்ள சுரோணிதம் (சிவப்பு) 7. ஆகிய ஏழுமாம். இந்த ஏழு தாதுக்களும் சேர்ந்தனவே மனிதராகிய நம்ஸ்தூல சரீரமாம். மற்றப் பிராணிகளின் சரீரங் களில் இவ்வேழு தாதுக்களில் சில குறைந்தும் இருக்கும். இவ்வாறுள்ள எல்லாச் சீவர்களின் ஸ்தூல சரீரங்களாகவுள்ள பிண்டங்களும் எல்லா அண்டங்களாகவுமுள்ள ஸ்தூல பஞ்ச பூதங்களும் சேர்ந்து இறைவனுக்கு ஸ்தூல சரீரமாக இருக் கின்றன. ஈஸ்வரன் தனது ஸ்தூல சரீரத்தோடு கூடியிருந்து அதை நானென் றபிமானிப்பது போலுள்ளபோது அவருக்கு விராட் என்றும் வைராஜ ரென்றும் பெயராம்.

ஸ்தூல சரீரத்தை சூட்சும சரீர தத்துவங் கள் இயக்குகின்றன. சூட்சும சரீரத்திலுள்ள

இருபது கருவி (தத்துவங்)களும் அதததற்குள்ளே யுள்ள ஈஸ்வர சக்தியினால் இயக்கப்பட்டுத் தத்தம் வேலைகளைச் செய்கின்றன. ஒவ்வொரு தத்துவத்தி லிருந்துகொண்டு அந்த அந்தத் தத்துவத்தை இயக்கும் போது இறைவனுடைய சக்திகளுக்கு அந்த அந்தத் தத்துவத்திற்குத் தகுந்தபடி ஒவ் வொருதேவதை யென்று ஒவ்வொரு பெயர் உண் டாகின்றது. அத்தேவதைகளின் பெயராவன:— பிரஞ்ஞாவுக்கு அதிதேவதை சதாசிவன். மனத் திற்குச்சந்திரன். புத்திக்குப் பிருகஸ்பதி. சித்தத் திற்கு வாசுதேவன். அஹங்காரத்திற்குருத்திரன். சுரோத்திரத்திற்கு அதிதேவதை திக்கு. துவக் கிற்கு வாயு. சுட்சுவுக்குச் சூரியன். ஜிஹ்வாவுக்கு வருணன். கிராணத்திற்கு அசுவினி குமாரர்கள். வியான வாயுவுக்கு அதிதேவதை விசுவயோனி. பிராணனுக்கு விசிஷ்டன். அபானனுக்கு விசுவ கர்த்தா. சமானனுக்கு ஜயன். உதானனுக்கு அஜன். வாக்கு இந்திரியத்திற்கு அதிதேவதை அக்கினி. பாணிக்கு இந்திரன். பாதத்திற்கு விஷ்ணு. பாயுவுக்கு மிருத்தியு. உபஸ்தத்திற்குப் பிரஜாபதி. இப்படி இத் தத்துவங்களை இயக்கு கின்ற இயவுளின் சக்திகளாகிய தேவதைகளுக்கு அதிதைவதங்கள் எனப் பெயராம். இந்த அதி தைவதங்களால் இயக்கப்படுகின்ற இருபது தத்து வங்களுக்கும் அத்யாத்மங்கள் எனப் பெயராம்.

அத்யாத்மங்களால் அறியப்படுகின்ற விஷயங் களுக்கும் செய்யப்படுகின்ற காரியங்களுக்கும் அதிபூதங்கள் எனப் பெயராம்.

ஒவ்வொரு ஜீவனுக்கும் உள்ளேயுள்ள பிரம்ம மாகிய ஆத்மாவின் சன்னிதி (முன்னிலை) விசேஷத்தி (சிறப்பி)னாலும், மாயாப் பிரதிபிம்பராகிய ஈஸ்வர ரோடு சேர்த்து இந்த இருபத்தொரு தேவதைகளின் அனுக்கிரகத்தினாலும் ஜீவன் ஒன்று, ஜீவ காரண சரீரமாகிய அவித்யா தத்துவம் ஒன்று, சூட்சும சரீ ரதத்துவங்கள் இருபது, ஸ்தூல சரீர தத்துவங்களா கிய தாதுக்கள் ஏழு ஆகிய இருபத்தொன்பது தத்து வங்களும் வேலை செய்துகொண்டிருக்கும் நிலை ஜாக்ர அவஸ்தா (நனவு நிலை) எனப் பெயர் பெறுகின்றது. இத்தகைய ஜாக்ர அவஸ்தை எனது நிலை யென்றும் இந்த ஸ்தூல சரீரம் நான் என்றும் அபிமானித்துக் கொண்டிருக்கின்ற ஜீவனுக்கு இந்த ஜாக்ர நிலையில் விஸ்வன் என்று பெயராம்.

ஒருவன் தூங்கும்போது ஸ்தூல சரீர வேலை யும் உணர்ச்சியும் வெளியுலகப் பொருள்களின் அறி வும் இல்லாமல் தானாக நினைவினால் உண்டுபண்ணிக் கொண்ட உள்உலக அறிவுடன் இருக்கின்றான். அந்த நிலைக்கு ஸ்வப்ந அவஸ்தா (கனவு நிலை) என்று பெயர். இப்படி ஸ்தூல சரீரத்தை மறந்து அந்தக் கனவு

நிலையை எனது நிலையென்றும் அப்போது காணப் படும் சூட்சும சரீரத்தை நான் என்றும் அபிமானித் துக்கொண்டிருக்கும் ஜீவனுக்கு அந்த ஸ்வப்ன நிலை யில் தைஜஸன் என்று பெயராம்.

எப்பொழுது கனவுங் காணமல் தூங்குகின் ருனே அப்போது ஸ்தூல சூட்சும சரீரங்களின் உணர்ச்சியற்று அவ்யாகிருத மென்றும், அவித்தை யென்றும் அஞ்ஞான மென்றும் பெயரினையுடைய காரண சரீரத்தோடு கலந்து அறியாமையுடைய வனய் இருக்கின்ருன். தூங்கி எழுந்தவுடன் நான் ஒன்றும் அறியாமல் தூங்கினேனென்று சொல்வதால் அவ்வாறு தூங்கும்போது காரண சரீர உணர்ச்சி மட்டும் இருக்கின்றது. அந்த நிலைக்கு ஸுஷுப்தி அவஸ்தா (உறக்க நிலை) என்று பெயர். இப்படி ஸ்தூல சூட்சும சரீரங்களை மறந்து அந்த உறக்க நிலையை எனது நிலையென்றும் அக்காரண சரீரத்தையே நான் என்றும் அபிமானிப்பதுபோலிருக்கும் ஜீவனுக்கு அந்த ஸுஷுப்தி நிலையில் ப்ராஜ்ஞன் என்று பெயராம்.

இவ்வெல்லாமும் சேர்ந்து ஓம் என்று சொல்லப் படுகின்றது. அஃதெப்படி? யெனில் — அ+உ என் னும் இரண்டெழுத்தும் சேர்ந்து ஓ என்னும் ஓர் எழுத்து ஆகின்றது. அதனேடு மகாரம் என்னும்-ம்- என்ற எழுத்தும் சேர்ந்து ஓம் என்று ஆகின்றது.

எழுத்துக்கள் உண்டாகும்போது முதலில் மூலாதாரத்திலிருந்து கழுத்தின் அடிப்பாகம் வரை சூக்ஷ்மமான நாதமா(ஒலியா)கக் கிளம்பிக் கழுத்தில் வந்தவுடன் நமக்குக் கேட்கும் ஸ்தூலமான நாதமா(ஒலியா)க வந்து கழுத்திலிருந்து உதடு மூக்கு வரை பலவிதமான எழுத்துக்களாகச் செய்யப்பட்டு வெளிவந்து நம் காதுகளில் விழுகின்றன. அப்படி முதலில் உண்டாகும் சூட்சும நாதமே அமாத்திரை யென்றும் அர்த்தமாத்திரை யென்றும் சொல்லப்படுகின்றது. ஸ்தூல நாதமாகவுள்ளபோதும் எழுத்துக்களாகக் கேட்கப்படும்போதும் அந்த அமாத்திரையே அவ்வாறு ஆகின்றது. ஆகவே ஓம் என்னும் எழுத்துக்களினின்று அமாத்திரையை வேறு பிரித்துக் காட்ட இயலாது. அமாத்திரையே சூட்சுமமான ஓங்காரமாம். சூட்சும ஓங்காரமே அமாத்திரையாம். ஆதலால் அமாத்திரையைச் சொல்லவேண்டுமென்றாலும் ஓம் என்றே சொல்ல வேண்டும். இவ்வாறு ஓங்காரம் அ + உ + ம் + அமாத்திரை என்று நான்கு பாகமாக உள்ளது. இவற்றுள் அ என்பது ஸ்தூல பூதங்கள், ஸ்தூல சரீரம், ஜாக்ர அவஸ்தை, விஸ்வன்என்னும் ஜீவன், விராட் என்னும் இறைவன் ஆகியஐந்திற்கும் பெயராம். உ-என்பது சூட்சும பூதங்கள், சூட்சும சரீரம்,ஸ்வப்ந அவஸ்தை,தைஜஸன்என்னும் ஜீவன், சூத்ராத்மா என்னும் இறைவன் ஆகிய ஐந்திற்கும் பெயராம். ம்-என்பது ஜீவ காரண சரீரமான அவித்

தை, ஈஸ்வர காரண சரீரமான மாயை, சுஷுப்தி அவஸ்தை, ப்ராஜ்ஞன் என்னும் ஜீவன், அக்ஷராத்மா வென்னும் இறைவன் ஆகிய ஐந்திற்கும் பெயராம். அமாத்திரை யென்பது ஒவ்வொரு சரீரத்திலும் உள்ள ஜீவனுக்குள்ளும் சுத்தமாய்க் கூடஸ்தன் என்னும் பெயரோடு விளங்கும் ஈஸ்வரனின் ஆத்மாவாகிய எங்கும் நிறைந்த பிரம்மத்தின் பெயராம்.

இவ்விஷயங்களை யெல்லாம் குருவின்மூலம் நன்ருக ஐயந் திரிபறத் தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு தெரிந்து கொண்டவர்கள் நிர்விகல்ப சமாதி கூடுவதற்காகத் தியானம் செய்வதற்கு உட்கார்ந்து முதலில் ஓம் என்று மூன்று முறை சொல்லும் வரை சுத்தப் பிரம்மத்தையும் பின் ஓம் என்று சொல்லும் போது சர்வ சக்தியோடு கூடிய காரணப் பிரம்மத்தையும் தியானம் செய்யவேண்டும். பிறகு ஓம் என்பது அ+உ+ம்+அமாத்திரை யென்று நான்கு பாகமாகப் பிரிந்துள்ளதாகப் பாவித்து அ என்று மனத்தினுல் சொல்லிக்கொண்டே தன்னுடைய ஸ்தூல சரீரத்தையும், ஜாக்ர அவஸ்தையையும், விஸ்வனுக வுள்ள தனது ஜீவனையும் பாவிக்கவேண்டும்.

பின்னும் அ-என்று மனத்தில் சொல்லிக் கொண்டே எல்லா ஸ்தூலசரீரங்களோடும் எல்லா அண்டங்களோடும் கூடிய விராட்டாகிய ஈஸ்வரனைச் சிந்தித்து தனது ஸ்தூல சரீரம், ஜாக்ர அவஸ்தை

விசுவன் எல்லாவற்றையும் அந்த விராட்டினின்று வேறு பிரிக்காமல் விராட்டாகவே பாவித்துத் தன் ஸ்தூல சரீரம் முதலியவைகளைத் தனியாக எண்ணுமல் விடவேண்டும்.

பிறகு உ.என்று சொல்லிக்கொண்டே தனது சூட்சும சரீரத்தையும் ஸ்வப்ன அவஸ்தையையும் தைஜஸனையும் பாவிக்கவேண்டும். பின்னும் உ-என்று சொல்லிக்கொண்டே எல்லாச் சூட்சும சரீரங்களோடும், எல்லாச் சூட்சும பஞ்ச பூதங்களோடும் கூடிய சூத்திராத்மாவாகிய இறைவனைச் சிந்தித்து, தனது சூட்சும சரீரம்-ஸ்வப்ன அவஸ்தை-தைஜஸன் ஆகியவற்றை அந்தச் சூத்திராத்மாவில் நின்று வேறு பிரிக்காமல் சூத்திராத்மாவாகவே பாவித்துத் தன் சூட்சும சரீரம் முதலியவைகளைத் தனியாக எண்ணுமல் விடவேண்டும்.

பிறகு ம்-என்று மனத்தினுல் சொல்லிக்கொண்டே தனது அவித்தையாகிய காரண சரீரத்தையும் சுழுத்தி யவஸ்தையையும் ப்ராஜ்ஞனுகிய ஜீவனையும் பாவிக்கவேண்டும். பின்னும் ம்-என்று சொல்லிக்கொண்டே எல்லா ஜீவர்களுடைய அவித்தைகளோடும் மாயையோடுங் கூடிய அக்ஷராத்மாவாகிய ஈஸ்வரனைச் சிந்தித்துத் தனது காரண சரீரம் சுழுத்தி அவஸ்தை ப்ராஜ்ஞன் எல்லாவற்றையும்

அந்த அக்ஷராத்மாவில் நின்று வேறு பிரிக்காமல் அக்ஷராத்மாவாகவே பாவித்துத் தன் காரண சரீரம் முதலியவைகளைத் தனியாக எண்ணாமல் விட வேண்டும்.

பின்னும் அ-என்று சொல்லிக்கொண்டே விராட்டையும் உ-என்று சொல்லிக்கொண்டே சூத்திராத்மாவையும் ம்-என்று சொல்லிக்கொண்டே அக்ஷராத்மாவையும் கொஞ்சநேரம் தியானித்து,அ-என்ற விராட் உ-என்ற சூத்திராத்மாவைவிட வேறில்லை யென்று உ-வில் அ-வை ஒடுக்கியும், உ-என்னும் சூத்திராத்மா ம்-என்னும் அக்ஷராத்மாவைவிட வேறில்லை யென்று ம்-மில் உ-வை ஒடுக்கியும், ம்-என்னும் அக்ஷராத்மா சூட்சும ஓங்காரமென்னும் அமாத்திரையாகிய சுத்தப் பிரம்மத்தைவிட வேறில்லை யென்றும் தியானிக்க வேண்டும்.

பிறகு சூட்சும ஓங்காரத்தையே சொல்லிக் கொண்டு அகண்டமாய் அறிவானந்த ஜோதியாயுள்ள சுத்தப் பிரம்மத்தைக் கொஞ்ச நேரம் தியானம் செய்து பின் 'அந்தச் சுத்தப் பிரம்மமே நான். நானே சுத்தப் பிரம்மம்' என்று மாற்றிமாற்றி அநேக முறை சிந்தித்து அந்த ஆனந்த வடிவிலேயே மனத்தை ஒடுக்கிவிட வேண்டும். இதுவே பிரணவ சமாதி முறையாம்.

இவ்வாறு நாள் தவறாமல் அநேகநாள் செய்து கொண்டேவரவர 'நான் அகண்ட அறிவானந்த ஜோதிமயமானபிரம்மமாகவே என்றும் இருக்கிறேன்' என்ற திட அனுபவஞானம் உண்டாகும். இத்தகையவன் இந்த ஸ்தூல சரீரத்தோடு இருக்கும்வரை ஜீவன் முக்தனுக இருக்கின்றான். பிராரப்த கர்மம்முடிந்து இந்தஸ்தூல சரீரம் விழுந்தவுடன் மற்ற ஜீவர்களைப்போல சூட்சும காரண சரீரங்களோடு வெளியே கிளம்பி வேறு பிறப்பினை அடையாதபடி சூட்சும சரீரம் சூட்சும பூதங்களில் ஒடுங்கிப் போக காரண சரீரமாகிய அஞ்ஞானம் ஞானத்தால் இல்லாமல் ஒழிந்து போவதால் அவ்விடத்திலேயே பிரம்மத்தோடு ஐக்கியமாகி விதேக கைவல்யத்தை அடைகின்றான்.

இவ்வாறு பழகி வருகின்றவன் ஒருக்கால் திட அனுபவ ஞானம் அடைவதன் முன் இறந்துவிடுவானேயானுலும் அவன் சத்திய லோகத்தில் சென்று பிரம்மாவைப்போல சகல சுகங்களையும் அனுபவித்து அங்கேயே திடஅனுபவ ஞானமடைந்து பிரம்ம கல்பத்தின் முடிவில் பிரம்மாவோடு மோக்ஷத்தையடைகின்றான்.

ஆதலால் முமுக்ஷுக்கள் இப்பிரணவ சமாதி முறையை விடாமல் நன்றாகப் பழகி வருவார்களாக!

பிரணவ தீபம் முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

ஓம்

சுத்தப் பிரம்மம்.

அ	உ	ம்
சத்வம்	ரஜஸ்	தமஸ்
விராட்	ஹிரண்யகர்ப்பர்	அக்ஷராத்மா
விஸ்வன்	தைஜஸன்	ப்ராஜ்ஞன்
ஜாக்ரம்	ஸ்வப்நம்	ஸுஷுப்தி

தத்துவங்கள்

மாயை	அவித்தைகள்
ஈஸ்வரன்	ஜீவர்கள்

அந்தக்கரணம்	வாயுக்கள்	பூதங்கள்
ப்ரஜ்ஞா	வியானன்	ஆகாசம்
மனம்	பிராணன்	வாயு
புத்தி	அபானன்	தேயு
சித்தம்	சமானன்	அப்பு
அஹங்காரம்	உதானன்	பிருதிவி

ஞானேந்திரியம்	கர்மேந்திரியம்	தாதுக்கள்
சுரோத்திரம்	வாக்	சர்மம்
துவக்கு	பாணி	ருதிரம்
சக்ஷு	பாதம்	மாம்ஸம்
ஜிஹ்வா	பாயு	ஸ்நாயு
க்ராணம்	உபஸ்தம்	அஸ்தி
		மஜ்ஜை.

அமாத்திரை

சுத்தப் பிரம்மாத்மா

ஓம்.

சிவானந்த சாதன நிலைய வெளியீடு மலர்கள்.

	ரூ.	அ.	பை
சிவானந்த சாதன நிலையம் ...		இனும்	
அருளுரைகள் ...	0	2	0
கீர்த்தன மாலை ...	0	2	0
தென்னிந்தியத் தலைமைத் தெய்வ நெறிக் கழகம் ...		இனும்	
தூய சிந்தைக் களஞ்சியம் ...	0	2	0
கீதாசாரத் தாலாட்டு (வரலாற்றுடன்).	0	4	0
பிரசினேத்தரி பகவத்கீதை பதவுரையுடன்			
ஷை முதல் அத்தியாயம் ...	0	4	0
ஷை இரண்டாவது அத்தியாயம் ...	0	6	0
ஷை பன்னிரண்டாவது அத்தியாயம் ..	0	2	6
ஷை மூன்றுவது அத்தியாயம் ...	0	4	0
ஸ்ரீ அஷ்டாக்ஷர தீபம் ...	0	2	6
பிரணவ தீபம் ...	0	6	0
ஈங்கோய்மலை க்ஷேத்திரம் புராணச் சுருக்கமும் தத்துவார்த்தமும் ...	0	6	0

குறிப்பு:— புத்தக விலையுடன் ஒரு புத்தகத்திற்கு முக்காலணு தபால் பில்லை சேர்த்துத் தபால் பில்லைகளாக அனுப்பினுலும் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

தெய்வ நெறிச் செல்வர்களே!

இந்நூலில் கண்டுள்ளபடி பிரணவ சமாதி முறையைப் பழக விரும்புகின்றவர்களும், வேறு யோக, ஞான சாதனைகளைப் பழக விரும்புகின்றவர்களும், வேதாந்தம், சித்தாந்தம், பதஞ்சலி யோக சூத்திரம் முதலிய ஆத்மீய சாஸ்திரங்களைக் கற்க விரும்புகின்றவர்களும், சிவானந்த சாதன நிலையத்தில் தங்கி, ஆகார முதலியவைகளைத் தங்கள் செலவிலேயே செய்துகொண்டு ஷை நூற்களைக் கற்றுக் கொள்வதோடு சாதனைகளையும் பழகிக்கொள்ளலாம். சாதனைகள் பழகுகின்றவர்களுக்குத் தற்போது 2-யோக சாதனக் கூடங்கள் உள்ளன. பொருளுடையவர்கள் தங்கள் செலவில் தர்மத்திற்காக யோக சாதனக் கூடம் கட்டி வைக்கலாம். ஆத்மீய முன்னேற்றமடைய விரும்புகின்றவர்கள் சிவானந்த சாதன நிலையத்தின் மூலம் பயனடைவார்களாக!

சிவானந்த சாதன நிலையம்,
ஈங்கோய்மலை.
முசிரி.
(திருச்சிராப்பள்ளி)

நாடார் பிரஸ் லிமிட்டெட், சிவகாசி.